தொழிற்சாலை எண் 0—1—6

Ref No. M. 3966. 1937. தேதி 1.

"PAHUTHARIVU" (REASON)

படி 3. படி 6.

# பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

| | |
|---|---|
| உள் நாடு ரூ. 1—0—0. | வெளிநாடு ரூ. 1 —8—0. |
| தனிப்பிரதி 0—1—6. | தனிப்பிரதி 0—2—6. |

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடபைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய் அட்டவணை பக்கம்.


| | |
|---|---|
| திதிப்புரட்டு (பாட்டு) எஸ். சிவப்பிரகாசம் | 1 |
| சடவுள்களின் சுயமரியாதை மகாநாடு (எம். ஆர். ஷிகடன்) | 3 |
| தீபாவளிப்பண்டிகையும் நமது மூடத்தனமும் (சாமி சிதர்பரனார்) | 11 |
| வடதிசையில்லாத வடதுருவம் | 15 |
| வைதீகன் யார்? (ஆர். வி. கார்வி) | 20 |
| ஜாலவித்தை (அப்பாவி) | 26 |
| இந்தியா ஒரு நேஷனா? | 29 |
| காதலும், சாதலும் (கதை) (பி. மீனாம்பாள்) | 43 |
| கிண்டல் (பி. எம். அம்பாள்) | 50 |
| மகளை மணந்த தந்தை | 51 |
| நாள்திகம் (ஈ. வெ. ரா.) | 52 |
| குருட்டு நம்பிக்கை (ஆர். டி. கார்வ்) | 60 |

# பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

—)O(—

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1937. அக்டோபர் 1. { இதழ் 6.


# திராவிடர் பரம்பரை.

(எஸ். சிவப்பிரகாசம்.)

[ஆடு பாம்பே எ. மெட்டு]

மூடநம்பிக்கை — இது — மூடநம்பிக்கை
மோக்ஷம் பெறலாமென்ற மூடநம்பிக்கை!

1. வாடிவருந்துகின்ற ஏழைமக்களே!
வறுமைப் பிணியால் மாளும் ஏழைமக்களே
தேடிய பொருள்தன்னை ஏழைமக்களே
திதிசெய் தழிப்பதேனோ ஏழை மக்களே

பாடு பட்டீர் — தினம் — பாடு பட்டீர்
பலனொன்றும் காணாமலே கெடுகெட்டீர்! (மூட)

2. மாண்டவர்க்கே பசி ஏழை மக்களே
வருத்துவதுண்டோ சொல்வீர் ஏழை மக்களே?
ஈண்டவர் பூதவுடல் ஏழை மக்களே
எரித்ததைக் கண்டிருந்தும் ஏழை மக்களே

வீணாகவே — நீங்கள் — வீணாகவே
விண்ணிலவர் வாழ்கின்றா ரென்றெண்ணுவதேன்?
(மூட)

3. எத்தனையோ ஜென்மமென்பீர் ஏழை மக்களே
எதற்குப் போய்ச் சேரும்நீங்கள் திதி கொடுத்தால்?
செத்தவர்க்குச் சேர்ந்ததென்றே ஏழை மக்களே-ஓரு
சேதிகிடைத்ததுண்டோ பாழுமக்களே!

பித்தர்போலே — நீங்கள் — பித்தர்போலே
பிதற்றித் திரிவதேனோ நித்த நித்தமே. (மூட)

4. மான்பன்றி மாடாடு மீன் ஆமையின்
மாம்ச ஊன் புரோகிதர்க்குக் கொடுப்பதாலே,
வான்புகுந்தோர் மோக்ஷம் பெறுவாரென்றே
வகுத்துச்சொன்னான் மது சாத்திரத்திலே!

ஏன் விடுத்தீர்? — அதை — ஏன் விடுத்தீர்?
ஏழேழு தலைமுறை நாசமாகுமாம்! (மூட)

5. வேகாத காய்கறியை ஏழை மக்களே
வீட்டிலுண்டாரா மாண்டோர் ஏழை மக்களே?
பாகம் செய்தே யதை ஏழை மக்களே
பார்ப்பான் அனுப்புவானோ பாழுமக்களே?

பார்த்து வந்தோம் — நாம் — பார்த்து வந்தோம்
பார்ப்பான் வயிற்றில் போக பார்த்து வந்தோம்!
(மூட)

6. பகுத்தறி வேயிலையோ ஏழை மக்களே
பார்ப்பான் வயிறோ மோக்ஷம் ஏழை மக்களே?
மிகுத்திடும் அறியாமை கொண்டு வாழ்வதேன்
மேனாட்டார் நம்மையெல்லாம் கேலி செய்வதேன்?

பகுத்தறிவீர்! — நன்கு — பகுத்தறிவீர்!
பாழும் புரோகிதத்தை உடைத்தெறிவீர்! (மூட)

7. தோஷம் விளையுமென்றே ஏழை மக்களே
தொந்தி வயிற்றுப்பார்ப்பான் ஏழை மக்களே
வேஷம் போடுவான் அதை ஏழை மக்களே
மீண் புரட்டென்றுரைப்பீர் ஏழை மக்களே!

போசம் போகாதீர்! - நீங்கள் - போசம் போகாதீர்!
மூடநம்பிக்கை கொண்டே நாசமாகாதீர் (மூட)

---

# கடவுள்களின்

# சுயமரியாதை மகாநாடு.

(M. R. விகடன்)

கடந்த 37—14—40.ல் சென்னைக்கு 2000 மைல் உயரத்தில் ஆகாயத்தில் கடவுள்களின் சுயமரியாதை மகாநாடொன்று கூட்டப்பட்டது. மகாநாட்டுப் பந்தல் வெகு அழகாகவும், அலங்காரமாகவும் பற்பல தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சாப்பாடு தண்ணீர் முதலானவைகளுக்கும் கல்ல வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. காலை 9-மணிக்கு மகாநாடு ஆரம்பித்ததும் எல்லாக் கடவுள்களும், தீர்க்கதரிசிகளும், மதப் பிரதிநிதிகளும், அவர்களுடைய மனைவிமார்களும் பந்தலில் வந்தமர்ந்தார்கள். கொஞ்ச நேரம் பந்தலில் அமைதி நிறைந்திருந்தது. பிறகு தோழர் இயேசுநாதர் எழுந்து பேசியதாவது:—

எனது அன்புமிக்க சகோதரர்களே! சகோதரிகளே! நம்மால் படைக்கப்பட்ட மனிதர்கள் அவமரியாதையிலிருந்து சுயமரியாதை அடைய ஒவ்வொரு தேசங்களிலும், நாடுகளிலும், இதைப்போலொத்த மகாநாடுகளைக் கூட்டி, தன் மதிப்புக்கும், சுதந்தரத்திற்கும் உரிய உயரிய தீர்மானங்களை நிறைவேற்றி எல்லாத்துறைகளிலும் முற்போக்கடைய பிரயத்தனப்படும், இந்த நூற்றாண்டில், தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு பற்பல புரட்டுக்களை எழுதி வைத்தும், அவைகளை ஒன்றும் அறியாத பாமர ஜனங்களுக்குக் காண்பித்தும், எய்த்துத்தின்று கொழுத்துவரும் புரோகிதர்களால் நாம் படும் அவஸ்தைக்கும், அவமரியாதைக்கும் அளவேயில்லை என்பதை நீங்களும், அறிவீர்கள். அப்பேர்ப்பட்ட ஒரு அவமானத்தை போக்குவதற்காக வேண்டித்தான் இம்மகாநாடும் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டிற்கு அவைத்தலைமை வகித்து சிறப்பாக நடத்தி வைப்பவர் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்தவராகவும், சுயமரியாதைத் தன்மையில் நீண்டகால அநுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். அத்தகையவர் மகான் தோழர் புத்தர் தான்

என்பதையும் உங்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன். ஆகையால் தோழர் புத்தரவர்களை இம்மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும்படி, யான் பிரேரிக்கிறேன்.

தோழர் மகமத் :— இச்சுயமரியாதை மகாநாட்டிற்குத் தகுதியான ஒரு தலைவரை தோழர் இயேசு அவர்கள் பிரேரித்ததை யான் என் முழுமனதுடன் ஆமோதிக்கிறேன்.

தோழர் பரமசிவன் :—ஏறத்தாழ 2500 வருடங்களுக்கு முன்னமே தன்னுடைய சுயமரியாதைக் கொள்கையை கீழ் நாடுகளிலும், மேல்நாடுகளிலும் பரவச்செய்து ஜன சமூகத்தைச் சீர்திருத்தம் செய்து தற்கால விஞ்ஞான சாஸ்திரிகளாலும் போற்றப்படுபவராகிய தோழர் புத்தரை இம்மகாநாட்டிற்குத் தலைவராக இயேசு அவர்கள் பிரேரித்ததையானும் ஆதரிக்கிறேன்.

பிறகு தோழர் புத்தரவர்கள் கரகோஷத்தினிடையே எழுந்து சபையோர்க்குத் தன்னை தலைமையாக்கினமைக்கு வந்தனமளித்துவிட்டுத் தலைமை வகிக்கும் முகத்தான் முகவுரையாக பேசியதின் சுருக்கமாவது:—

என்தன்பார்ந்த கடவுள்களே! தேவர்களே!!

மதப்பிரதிநிதிகளே!!! சகோதரி சகோதரர்களே!!!!

இன்று கூடிய கடவுள்களின் சுயமரியாதை மகாநாட்டிற்கு என்னை தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டதற்கு யான் மிக்க கன்றியுள்ளவனாகக் கருதுகின்றேன்.

நான் 2500 வருடங்களுக்கு முன் அநேக எதிர்ப்புகள், இடுக்கண்களிடையில், சுயமரியாதைக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டு எனது தர்மத்தை போதித்தேன் என்றும், பிட்சுக்களின் மூலமாகவும், எனக்குப் பின்வந்த அசோக சக்காவர்த்தியைப் போன்ற அநேக ராஜாக்களின் மூலமாகவும் எனது சமதர்மம் உலகமுழுதும் பரப்பப்பட்டதென்றும், அதனால் ஜனங்கள் சுயமரியாதை, சகோதரத்துவம், சமத்வம், சுதந்தரத்துடனும் வாழ்ந்து வந்தார்களென்றும், எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள். அதை என் முழுமனதுடன் ஒப்புக்கொள்கிறேன். அதற்குச் சரித்திர ஆதாரமும் உங்களுக்கு இருக்கிறது. ஆனால் அப்பொழுதே மனிதர்கள் என் தர்மத்தைக் கைக்கொண்டதைப்

போல் நீங்களும் மேற்கொண்டிருப்பீர்களே யானால் இப்போது வயிற்றுப்பிழைப்புக்காக புரோகிதர்களாயிருப்பவர்களிடத்தில் நீங்கள் மாட்டிக்கொண்டு அவஸ்தையும், அவமரியாதையும் அடையமாட்டீர்கள். உங்களைப்பற்றியும், உங்கள் மனைவிமார்களைப்பற்றியும் ஆபாச முறையில் புராணங்களும், இதிகாசங்களும் எழுதப்பட்டிருக்காது. அந்த சமயத்தில் பிர்மா எழுந்து ஆமாம் சார், நான் என் குமாரத்தியை விபசாரம் செய்ததாகக்கூட எழுதிவிட்டார்கள் என்றார். (சரி உட்காரும் என்ற சப்தம். கூட்டத்தில்குழப்பம் அடங்குவதற்கு ஐந்து நிமிஷம் பிடித்தது.) (பிறகு புத்தர் ஆரம்பித்தார்) ஆகையால், சகோதரர்களே! மனிதர்களுக்கு இருந்த பகுத்தறிவு கூட உங்களுக்கு அந்தக் காலத்தில் இல்லையென்றே விசனத்துடன் சொல்லுகிறேன். இப்படியே நிங்கள் புராண மனியாதைக்காரர்களுக்கு விட்டுக் கொடுத்துக்கொண்டு போவீர்களானால் இதைவிட இன்னும் ஆபாச புழுகு மூட்டைகளை உங்கள் மீது சுமத்தி அவமானப்படுத்திக்கொண்டே வருவார்கள். இவைகளையெல்லாம் தீர்மானங்களின் மூலமாகக் கண்டித்து இந்த வருஷம் கூடப் போகும் மாகாண சுயமரியாதை மகாநாட்டிற்கு அனுப்பி அழுலுக்குக் கொண்டுவரச்செய்யலாம். இப்போது தோழர் இயேசு அவர்கள் அரை மணி நேரம் பேசுவார் என்று நம்புகிறேன் என்று கூறினார்.

பின் இயேசுநாதர் எழுந்து பெருமை வாய்ந்த தலைவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே என்னுடைய குறைபாடுகளை எல்லாம் உங்களுக்கு விளக்கமாகச் சொல்வென்றால், எனக்கு ஆங்கிலத்தில் தவிர தமிழில் அவ்வளவு விளக்கமாக பேசமுடியாது என்றபோதிலும் என்னால் கூடியவரையில் பேச பிரயாசைப்படுகிறேன் அதன் குற்றங்குனை மன்னிப்பீர்களாக.

எனதுடைய கொள்கையை பின்பற்றி நடக்கக்கூடியவர்கள் ஜரோப்பா கண்டத்தில் தான் அதிகமென்பது உங்களுக்குத்தெரியும். எனது முக்கிய வாசஸ்தலம் ரஷ்யா தேசந்தான். சகோதரர்களே இப்போது ரஷ்யாவில் என்ன நடக்கிறது பார்த்தீர்களா? என்பெயரை கனவிலும் நினைக்கக்கூடாதென்று அரசாங்கத்தாரே 144-வது சட்டம் போட்டுவிட்டார்கள். என் பெயரைச்சொல்லி பாமர ஜனங்களை பயமுறுத்தி எமாற்றிப் பிழைத்து வந்த கூட்டத்தாருக்கு வயதிற்குத்தக்கபடி தொழிற்சாலைகளில் வேலை கொடுத்து

விட்டார்கள். குருட்டு நம்பிக்கைகளையும் மூட்டாள்தனமாக கையாண்டு வந்த சாங்கியம் சடங்குகளையும அறவே ஒழித்து விட்டார்கள். மதமென்பது மக்கள் ஒற்றுமைக்கு எதிரிடையாயிருக்கிறபடியால் எந்தவிதமான மதமும் இருக்கக்கூடாதென்று சட்டபூர்வமாக நீக்கி விட்டார்கள். அது மாத்திரமா? துருக்கி தேசத்திலும் ஸ்பெயின் தேசத்திலும் இதைப்போலவே சீர்திருத்தம் செய்து விட்டார்கள். ஜெர்மனியிலும் பகுத்தறிவு சங்கங்கள் ஆங்காங்கு கிளப்பி, பண்டைக்கால புரோகிதர்கள் எழுதிவைத்த அண்டப் புழுகுகளையும் கேள்விக்குப்பதிலற்ற ஆபாசக் கதைகளையும் விளக்கிக் காட்டி சீர்திருத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கில் அவ்விடத்தில் சுயமரியாதைக் காரர்கள் விர்த்தியாகிக்கொண்டு வருகிறார்கள் என்று பேசினார்.

உடனே மஹா விஷ்ணு எழுந்து ஆமாம், ஆமாம் நான் கூட "டைம்ஸ் ஆப் இண்டியா" (Times of India) என்ற பத்திரிகையில் வாசித்திருக்கிறேன். லண்டனில்கூட அநேக சீர்திருத்த சங்கத்தார் லட்சக்கணக்கில் Tracts துண்டுப் பிரசுரங்களை வழங்கி நமது தோழரைப்பற்றியும், அவரது தாய் தந்தையர்களைப் பற்றியும் அநேக கேள்விகள் கேட்கிறார்களாம். ஜனங்களும் ஆராய்ச்சி புத்தியால் கற்பனா நம்பிக்கைகளை நீக்கி பகுத்தறிவு சங்கங்களிலேயே சேர்ந்து வருகிறார்களாம். நான் ஒருமுறை லண்டனிலுள்ள ஒரு டீ ஹோட்டலில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது எனக்கும் ஒரு நோட்டீஸ் கொடுத்தார்கள். அது இதோ இருக்கிறது பாருங்கள் என்றார். (உடனே உட்காரு, உட்காரு என்று கூட்டத்தில் பேசிய சப்தம்) உடனே புத்தர் எழுந்து What a fool-you are! Don't interrupt என்று ஆங்கிலத்தில் சொன்னார். அவருக்கு எப்படி ஆங்கிலம் தெரியுமென்று சிலர் சந்தேகிக்கலாம். அவருக்கு அதிகமான வரவேற்பு மேல் நாட்டில்தான். உலகத்திலுள்ள எல்லா விதமான பாஷைகளிலும் பேசவல்லவர், மற்றவர்களைப்போல் ஒரே இடத்திலிருந்து கொண்டு ஒரே பாஷையைக் கற்றுக்கொண்டவரல்ல.

(இயேசுநாதர் மறுபடியும் பிரசங்கிக்கத் தொடங்கினார்)

சகோதரர்களே! கொஞ்சம் கலாட்டா செய்யாமல் இருக்கும்படி வணக்கமாய் கேட்டுக்கொள்கிறேன். இப்போது எனக்கு சுயமரியாதைக் காரர்களின் மீதுதான் அதிக அன்

பேற்பட்டிருக்கிறது. அவர்களுக்குத்தான் மோகஷமும் கொடுப்பேன். ஏனென்றால் தன்னைப்போல மற்றவர்களையும் கிரியாமார்கத்தில் சேர்க்கிறார்கள்; ஆண் பெண் இருபாலருக்கும் சமத்துவம் கொடுக்கிறார்கள்; சகோதரத்வத்தைக் கையாளுகிறார்கள். உயர்வு தாழ்வைப் பகிஷ்கரிக்கிறார்கள். எனக்கு உண்டிப்பணம் கொடுக்கிறேனென்றோ, பிராத்தனை செலுத்துகிறேனென்றோ, மொழுகு வர்த்திகள் கொழுத்துகிறேனென்றோ சொல்லி ஏமாற்றி ஆசீர்வாதம் கேட்கிறதில்லை. ஒருதான் தவறாமல் பஞ்சமா பாதகங்களைச் செய்துவிட்டு ஒரு நாளைக்கு இருமுறை ஜபத்தால் மன்னிக்கும்படி என்னை தொந்திரவு செய்கிறதில்லை. சன்மார்க்கமாகவும் எனக்கு யாதொரு தொந்திரவும் கொடுக்காமல் நீதியாக நடந்து கொள்ளுகிறவர்கள் சுயமரியாதைக்காரர்களென்பது நடக்கையாலும், அவர்களின் பிரசாரத்தாலும் யான் அறிகிறேன். என்னுடைய பத்து சன்மார்க்க போதனைகளின் பிரகாரந்தான் நடக்கச் சொன்னேனேயொழிய அவைகளுக்கு விரோதமாக நடந்து கொண்டு, என்னைப்போல் உருவம் செய்து கோவிலில் வைத்துக் கும்பிடச் சொல்லியோ, எழுகளுக்குக் குடிக்கக் கஞ்சியும், உடுக்க ஆடையும், படுக்க வீடுமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கும்போது எனக்கு 50, 60 லட்சம் பண செலவில் கோவில், கோபுரங்கள் கட்டி எழு வேளை மணியடித்தும், தேர் திருவிழாக்கள் செய்தும் ஆயிரரூபாய் கணக்கில் சைனா ஜப்பான் வெடி பாணங்களை வாங்கி சுட்டு புகையாக்கவும்தான் சொல்லவேயில்லை. வேண்டுமானால் எனது பைபிள் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து என்னைக் கேள்வி கேட்கட்டும். எவன் என்னை ஜெபதபங்கள் மூலமாக ஏமாற்றலாமென்று நினைத்துக் கொண்டும், என் கற்பனையின்படி நடக்காமல் பக்தனைப்போல் பாசாங்கு செய்து கொண்டும் எனக்கு தெரியாத ஓர் மோட்ச லோகத்திற்கு போலி பக்தியால் என்னை ஏமாற்றிவிட்டு போய் விடலாமென்றும், இவர்கள் கேட்டதையெல்லாம் ஒத்துக்கொண்டு தலையாட்டுகிற பூமாடு என்று நினைத்தும் அவமானப்படுத்தியும் வருகிறானே அவனை கட்டாயம் நரகத்தில்தான் போடுவேன். இது பரியந்தம் அப்பேர்ப்பட்டவர்களைத்தான் நரகத்தில் போட்டுமிருக்கிறேன். என்னைவிட மிகத்தெளிவான தோழர் பரமசிவன் அவர்கள் தற்கால முற்கால புரோகிதர்களின் புரட்டை விளக்கிக்காட்டுவாரென்ற நம்பிக்கையுடன் எனது பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

பின் பரமசிவன் எழுந்து (எழுந்ததும் உரக்க பேசுங்கள் என்ற சப்தம்) பேசியதாவது:- தலைவராவர்களுக்கும் சகோதரி சகோதரர்களுக்கும் எனது பட்சமான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தோழர் இயேசு அவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டு மிக விரிவாக பேசினார். இப்போது நேரமும் ஆகிவிட்டது, ஆகையால் சுருக்கமாக சிலவற்றை மாத்திரம் சொல்லுகிறேன். என் மீது நம்பிக்கையுடையவர்கள் ஏறத்தாழ 2 கோடி ஜனங்கள்தான். அதுகூட இந்தியாவின் சில பாகங்களில் மட்டுந்தான். ஆனால் நமது தலைவர் புத்தருக்கோ விஞ்ஞான சாஸ்திரிகள் உட்பட உலக முழுவதும் அவருடைய கொள்கையை பின்பற்றக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். எனது 22 கோடி ஜனங்களிலும் ஆதிதிராவிடர்கள் 7 கோடி. இவர்களுக்கு என் மதத்தில் யாதொரு உரிமையும் இடையாது. என மதத்திலுள்ள மேல்ஜாதி இந்துக்கள் இவர்களைக் கோவிலிலும், பள்ளியிலும், பொதுவான இடங்களிலும் கூட சேர்க்கிறதில்லை. காய், கழுதை, பன்றி முதலான மிருகவர்க்கங்கள் நடமாடுகிற தெருக்களிலும் கூட செல்லவிடுகிறதில்லை. பட்சிகள் மலங்கழித்து பாசிகள் படர்ந்து, புழு பூச்சிகள் செத்து, துர்நாற்றம் எடுக்கும் தண்ணீரை இவர்கள் எட்டிப்பார்த்தாலும் கூட மேல் ஜாதியாரென்பவர்கள் இவர்களைத் தூரத்தியடிப்பார்கள். இவர்கள் பிரதிஷ்டசத்தில் இத்துன்பங்களையெல்லாம் அநுபவித்தும் கொஞ்சங்கூட பகுத்தறிவும், சுயமரியாமையுமில்லாமல் தாங்களும் இந்துக்கள் தானென்று பெருமையாக சொல்லிக் கொள்கிறார்கள். (அவமரியாதை, வெட்கம், கேவலம் என்று கூட்டத்தில் பெரிய கூச்சல்) இந்த அவமரியாதைக்காக வேண்டித்தான் லட்சக்கணக்கான ஜனங்கள் தோழர் இயேசு அவர்களின் மதத்தில் போய் சேர்ந்தார்கள். அங்குகூட பாழாய்ப்போன பறைபிசாசும் அவர்களை விட்டபாடில்லை. (அதற்குப் பரிகாரமென்ன? என்ற கூச்சல்) சகோதரர்களே! அதற்கு இப்போது சமூகமுன்னேற்றத்திற்கு தொண்டாற்றி வரும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றினாலொழிய, பட்டை நாமம் அடித்து உச்சிக்குடுமி வைத்து பார்ப்பனரைப்போல் பசல் வேஷம்போட்டு பரமசிவனின் பாட்டனாரைத் தொழுதாலும் இழிகுலத்தோ ரென்னப்பட்ட பெயர் ஒருபோதும் இவர்களை விட்டகலப் போகிறதில்லை. இது இத்துடனிருக்கட்டும். இந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் கூட போக்கிரிப் புரோகிதர்களால் எங்கள் மீது ஆபாசமாக எழுதிவைக்கப்பெற்ற

புராணங்களையும், கதைகளையும், பாட்டுகளையும் பாடி எங்களை அவமானப்படுத்துகிறார்கள். கடவுள் ஐம்புலன்களுக்கும் எட்டாதவர், தலைகீழாக நட்டுக்கொண்டு தவம் செய்தாலும் காணக்கூடாதவரென்று சித்தர்களாலும், ஞானிகளாலும் சொல்லப்பட்டிருக்க, கான் வீதி வாசல் பெண் ஜாதி பிள்ளையுடன் (இவர்கள் பார்த்ததைப்போல் புளுகும் கைலாயமென்ற ஒரு இடத்தில் வசிக்கிறதாகவும், எனக்கு ஒரு சோதரியுங்கூட உண்டென்றும், நான் தருகானனத்து ரிஷி பத்தினிகள் கற்பை அழித்ததாகவும் அதனால் என் ஆண்குறி அறுந்துபோகும்படி சாபம் பெற்றதாகவும், நான் என் மனைவியுடன் 100 தேவ வருடம் இடைவிடாமல் புணர்ச்சி செய்ததாகவும் பிரம்மா என் மனைவியின் மீது காதல் கொண்டதாகவும் இன்னும் அளவற்ற ஆபாசங்களையெழுதிவிட்டதோடு நில்லாமல் பாடல்களாகவும் பாடி, அல்லும் பகலும் எங்களை அவமானப்படுத்துகிறார்கள். இந்தப் பாடல்களை கோவில்களிலும் பஜனைகளிலும் பாடினால் நாங்கள் பேசாதிரும் கொடுப்போமென்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களின் முட்டாள் தனத்திற்கும், ஏமாற்றுதலுக்கும் நான் விசனப்படுகிறேன். இந்த விதமான அவமரியாதையினின்றும் நீங்கி சுயமரியாதை அடைவதற்காகத்தான் இந்த சுயமரியாதை மகாநாட்டைக் கூட்டி சீக்கிரத்தில் கூட்டும்படி நமக்கு கேரிட்டது. நமக்கு இது மூன்றாவது மகாநாடாகிறது என்றார். உடனே விநாயகக்கடவுள் எழுந்து இதற்கு முந்திய இரண்டு மகாநாடுகள் எங்கே கூடின? என்றார். உடனே சுதஸ்வதி "நிவோல்ட்" "ஞுடயாசு" என்ற பத்திரிகைகளில் நீர் பார்க்கவில்லையா? யானைத்தலையும் கவனை வயிறுமாக இருந்தால் பாவம் உமக்கு எப்படித் தெரியும்! என்றார் (வெடி கூச்சல் அடங்கியதும் பரமசிவன் மறுபடியும் பேசுகிறார்) ஆனையால் சகோதரர்களே! சுயமரியாதைக்காரர்கள் ஒரு ஆத்திற்கு ஒரு மகாநாடு கூட்டினார்கள், நாம் 2 மகாநாடுகள் கூட்டி பிரோகிதர்களைக் கண்டிப்பதைத் தவிர, நமக்கு யாதொரு தொந்தரவும் செய்யாத சுயமரியாதைக்காரர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு காரியங்களிலும் உதவி செய்து அவர்களுக்குத்தான் மோட்சமும் கொடுக்கவேண்டுமென்று கூறி என்னுடைய பிரசங்கத்தை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

பிறகு தலைவர் முடிவுரை கூறினார். தோழர் மகமத் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு பகல் பன்னிரண்டு மணிக்கு கூட்டம் கலைந்தது.

அன்று பிற்பகலில் நிறைவேறிய மகாநாட்டுத் தீர்மானங்கள்:—

குருட்டு பழக்க வழக்கங்கள், மூட நம்பிக்கைகள் அதனால் உண்டாகும் வீண் பொருள் நஷ்டங்கள், வானத்தைக் காட்டிம் பயமுறுத்தி வயிறுவளர்க்கும் புரோகிதர்கள், ஆணடிமை, பெண்ணடிமை, கர்மம், விதி, சோம்பேறி ஞானம் இன்னும் அநேக மூடவிஷயங்களை நீக்கி ஜனங்களை சீர்திருத்தம் செய்த ரஷியா, துருக்கி, ஸ்பெயின், சைனா, ஜப்பான் இன்னும் அனேக குறையான சீர்திருத்தத்திலிருக்கும் இராஜாங்கங்களுக்கு இந்தமகாநாடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. (இயேசுநாதர்)

நெற்றி நேர்மை நிலத்தில் விழ பாடுபட்டு சம்பாதித்த ஏழை ஜனங்களின் பொருளைக்கொண்டு கட்டிய கோவில்களில் கல்லு, கட்டை, பொம்மைகள் வைத்து சுவாமிகள் என்று சொல்லி பணம் பறித்து தேர், திருவிழாக்கள் செய்வதையும், ஜப்பான், சைனா கற்பூரங்களையும், வாணவெடிகளையும் லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாங்கி வீணில் கொளுத்தி புகையாக்குவதையும், மீதி பணத்தை ஓர் புரோகிதக் கூட்டத்தாரே தின்று கொழுத்துத் திரிவதையும், பெண்சாமிகளின் மர்மபாகங்களின் மீதெல்லாம் புரோகிதர் கைபோட்டு ஸ்நானம் செய்விப்பதையும் இம்மகாநாடு பல மாகக் கண்டிக்கிறது. (பார்வதி)

துருக்கித் தேசத்தாரைப்போல் குருட்டுப் பிடிவாதங்களை விட்டு கல்வியிலும், பகுத்தறிவிலும், விசாரணையறிவிலும், காகரிகத்திலும் முற்போக்கடையும்படி இதர நாட்டாரையும் இம்மகாநாடு மிகத்தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறது. (முகமத்)

தேங்காய், பழம், அவல், கடலை வைத்துப் படைத்து பூசைபோட்டு எல்லாக் கல்வியும் எளிதில் அடையலாமென்ற சுயநம்பிக்கையற்ற முட்டாள் புத்தியை விட்டு விட்டு, மேல் நாட்டாரைப்போல சுயமுயற்சியால் கல்வியும், அறிவும் பற்பல யந்திரங்களையும் நூதனக் கருவிகளையும், தானங்களையும் கண்டுபிடிக்கும் ஆற்றலும் உடையவர்களாக இருக்கும்படி இந்தியர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது. (சரஸ்வதி)

# தீபாவளிப் பண்டிகையும் நமது மூடத்தனமும்

(சாமி சிதம்பரனார்.)

இந்துக்கள் என்பவர்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளிப் பண்டிகையும் ஒன்றாகும். இதுவும் இந்து மத வழக்கத்தில் ஒன்றாகும். ஒவ்வொரு பண்டிகைக்கும், ஒவ வொரு புராணக்கதை கற்பிக்கப்பட்டு இருப்பதை யாவரு மறிவோம். அவ்வாறே தீபாவளிக்கும் ஒரு புராணக்கதையைச் சுருங்கக் கூறி முடித்து விட்டு அதன் பின்னர் நமது எண் ணத்தை வெளியிடுகின்றோம்

இரண்யாட்சதன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் ஒளிந்து கொண்ட பொழுது திருமால் பன்றியருக் கொண்டு வந்து இரண்யாட்சதனைக் கொன்று பூமியை நிலைக்கச் செய்தாராம். அப்பொழுது பன்றியுருவோடிருந்த திருமாலை, பூமிதேவி மணம் செய்துகொள்ள விரும்பினா ளாம். உடனே பன்றியும் பூமிதேவியும் திருமணம் செய்து கொண்டார்களாம். அவ்விருவர்களுக்கும் ஒரு மகன் பிறந் தானாம். அவனுக்கு நரகாசுரன் எனறு பெயர். இவன் மாகிஷ் மதி என்னும் பட்டணத்தை அரசாண்டுகொண்டிருந்தானாம். துவஷ்டாவின் பெண்ணாகிய கசேரு என்பவளை இவன் ஒரு யானை உருவத்துடன் சென்று சிறை பிடித்துக் கொண்டு வந்து மணம் செய்து கொண்டனனாம். இவன் காசிபரின் மனைவியாகிய அதிதியென்பவளின் கர்ணணியையும், வருண னுடைய குடையையும் கவர்ந்து கொண்டனனாம். அன்றி யும் எப்பொழுதும் தேவர்களுக்குப் பெரும் இடையூறு களைச் செய்து கொண்டே யிருந்தானாம். இவ்வாறே இவன் அநேக ஆண்டுகள் வாழ்ந்து வந்தனாம்.

இந்நரகாசுரன் துன்பத்தைப் பொறுக்கமாட்டாமல் தேவர்களனைவரும் முறையிட்டதைக் கேட்ட திருமால், அவனைக் கிருஷ்ணாவதாரத்தில் கொன்றுவிடுவதாக வாக் களித்திருந்தாராம். அதன் படியே, கிருஷ்ணன், ஒரு சமயத்

தில் திருமாலின் அவதாரமென்று சொல்லப்படுகின்ற தாணும், பூமிதேவி அவதாரமென்று சொல்லப்படுகின்ற சத்தியபாமை யென்னும் தனது மனைவியும் சேர்ந்து நரகாசுர பட்டினத்தை யடைந்தார்கள். கண்ணன் நரகாசுரனுடன் எதிர்த்துச்சண்டைசெய்துகொன்றானாம். நரகாசுரன் இறக்கும்போதுதான் இறந்த தானை உலகத்தார் கொண்டாடும்படி செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொண்டானாம். அவன் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்று சத்தியபாமையும் விரும்பினாளாம். அதற்கறிகுறியாகத்தான் தீபாவளிப் பண்டிகை ஏற்பட்டதாம். இது தான் பாகவதம் முதலிய புராணங்களில் வழங்கும் கதையாகும்.

இனி இக்கதை எவ்வளவு தூரம் உண்மையாக விருக்க வேண்டுமென்பதைச் சிறிது ஆராயலாம். பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் ஒளித்தான் என்னுங் கூற்று பொருந்துமா? பூமி உருண்டை வடிவமா? தட்டை வடிவமா? பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு கடலில் ஒளிப்பது எப்படி? பூமி பெங்கிநிக்கின்றது? கடல் எதன் மீது இருக்கின்றது? என்ற கேள்விகளைக் கேட்போமாயின், திருமாலின் பன்றிபவதாரத்திற்கே ஆபத்து வந்து விடுகின்றதன்றோ?

பிறகு பூமிதேவி பன்றியைக் கண்டு ஆசைப்பட்டாள் என்று கூறுவதனால் பூமி என்பது ஒரு பெண்ணுருவமா? ஒரு பெண்ணின் மேலா நாம் இவ்வளவு காரியங்களையும் செய்துகொண்டிருக்கின்றோம்? என்ற கேள்விகளுக்கும் சரியான பதில் கிடைக்கவில்லை யன்றோ? ஒரு இயற்கைப் பொருளைப் பெண்ணாக ஆக்கி அப்பெண் ஒரு பன்றியோடு சேர்ந்து பெரும் புகழ் வாய்ந்த ஒரு பிள்ளையைப் பெற்றதாகக் கூறப்படும் கதையையும் உண்மையென்று நம்புவார் பகுத்தறிவுடையராக விருக்க முடியுமா?

இனிக் கடைசியாக நரகாசுரனைக் கொன்றதாகக் கூறப்படும் கண்ணனைப்பற்றிச் சிறிது சிந்தித்துப் பார்ப்போம். திருமாலவதாரமென்று சொல்லப்படுகின்ற கண்ணன் நரகாசுரனுக்குத் தந்தையாக வேண்டுமன்றோ? ஆகவே தகப்பன் மகனைக் கொலை புரிந்த கதைதான தீபாவளி யென்று முடிகின்றதன்றோ? தகப்பன் தான் மட்டுஞ் சென்று மகனைக் கொல்லாமல் தயாரையும் பக்கத்தில் வைத்துக்

கொண்டு கொன்றானாம். பூமிதேவியின் அவதார்மென்று சொல்லப்படுகின்ற சத்தியபாமையை நரகாசுரனுக்கு தாயன்றோ? மகனைக்கொன்ற கண்ணன் பெருமையைத்தான் பெருமையாகப் பேசுகின்றோம்! அந்தோ இதை விட குறைந்த அறிவுடைய செயல் வேறென்ன விருக்கின்றது?

மேற்கூறிய "உத்தமமான" புராணக்கதையினால், நமது "பரிசுத்தமான" தீபாவளிப் பண்டிமைய்யின் பெருமையை நீங்களே ஊகித்து உண்மையை உணரலாம்.

தீபாவளிப் பண்டிகைக்காக வழங்கி வரும் கதையே கட்டுக் கதையாக முடிகின்றபோது தீபாவளியை எப்படி நமக்குரிய பண்டிகை யென்று கொள்ள முடியும்? இத்தகைய மூடக் கதையை—பொருந்தாத போலிக் கதையை—ஆதாரமாகக் கொண்ட தீபாவளியை வீண் செலவு செய்து ஏன் கொண்டாட வேண்டுமென்றுதான் கேட்கின்றோம்.

சிலர் "தீபாவளிப் பண்டிகை மழைக் காலத்தில் வருவதால், அன்று சுகாதார முறையைக் கைக்கொள்வதற்குப் பதிலாக இப்பண்டிகையின் மூலம் நம்மையும் நமது வீடு வாசல்களையும் சுத்தஞ் செய்கின்றோம்" என்கிறார்கள். எண்ணெய் தேய்த்து முழுகுவதும், புதிய ஆடையை உடுத்திக் கொள்வதும், சுகாதாரத்திற்கறிகுறியாம். வாணங்களை வாங்கிக்கொளுத்திக் கெட்ட காற்றை உட்கொள்வதும் சுகாதாரமாம்.எண்ணெய்ப் பண்டங்களை உண்டு பிணியடைவதும் சுகாதாரமாம்! என்னே இவர் தம் அறியாமை!

நாம் தீபாவளியைப் பற்றிக் கூறுங்கால், "ஏராளமான பொருளை வீண் செலவு செய்யும் பொருளற்ற மத சம்பந்தமான சடங்குகளில் ஒன்றுதான் தீபாவளி யென்று கூறுவோம். தீபாவளியன்று நமது இந்தியாவில் எவ்வளவு பொருள் வீணாகின்ற தென்பதைக் கணக்கிடுவோமாயின் கோடிக்கணக்கான பொருள் வீணாகின்ற தென்பது விளங்கும். புதிய ஆடைகளுக்காக—ஆடம்பரமான உடைகளுக்காக—அந்திய நாட்டினர்க்கு அளவு கடந்த பொருளை அள்ளிக் கொடுக்கின்றோம். ஒரு பயனுமற்ற வெடிகளுக்காக எத்தனையோ லட்சம் ரூபாய் அள்ளி இறைக்கின்றோம். "காசைக் கரியாக்காதே வாணத்தை வாங்கிச்சுடு" என்ற பரிகாசப் பழமொழி நம்மை எளனஞ் செய்வதற்கு எழுந்த பழமொழியன்றோ? நமது இச் செய்கையைக் கண்ட

அந்நியர் எவர்தான் நகைக்கமாட்டார்கள்? எவர்தான் நம்மை அறிவிலிகள் என்று கூறமாட்டார்கள்?

இம்மட்டோ! இன்னும் இவ்வெடிகளால் உண்டாகும் ஆபத்துக்கள் எவ்வளவோ உண்டு. வெங்காய வெடி செய்வதனால் கண்ணிழக்கின்றவர்கள் எத்தனை பேர்? கையிழக்கின்றவர், காலிழக்கின்றவர் எத்தனை பேர்? உயிர் விடுவோர் எத்தனை பேர்? மற்றும் வெடிக்கும் வெடிகளால் காயமடைவோர் எத்தனை பேர்? இதற்கெல்லாம் காரணம், தீபாவளி யென்னும் பாழும் கடன்கார மதச்சடங்கன்றோ? மதச் சடங்கென்பதை விட மடச் சடங்கென்று கூறுவது பொருத்துமென்று நினைக்கின்றோம்.

இதுமட்டோ? மழை நாளில் எண்ணெய்ப்பண்டங்களை யுண்டு வயிற்று நோய் கொண்டோர் எத்தனை பேர்? விஷ பேதிக்குட்படுவோர் எத்தனை பேர்? சுர நோய் கொள்வோர் எத்தனை பேர்? இதற்கு வேறு உதாரணம் வேண்டாம். தீபாவளியன்று காலையில் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பார்வையிடுவார்களாயின் பலகாரப் பெருமையையும் தீபாவளியின் மாண்பையும் உணரலாம்.

ஆகவே, மதம் மதம் என்று சொல்லிக் கொண்டிருப்பதனால்எவ்வளவு துன்பமுண்டாகின்றதென்பதை ஆராய்ந்து பாருங்கள்! இந்தத் தீபாவளிச் சடங்கினால், நமது பொருளுக்கும், உடம்புக்கும், அறிவுக்கும், எவ்வளவு சேதமுண்டாகின்றதென்பதைச் சிறிது கூர்ந்து நோக்குவோமாயின் இது போன்ற சடங்குகளைக் கொண்டாட—மத சம்பந்தமான சடங்கென்று சொல்ல-முன் வருவோமா? தமிழ் மக்களுக்குப் பல வகையிலும் தேசம் விளைவிக்கின்ற இத் தீபாவளிப் பண்டிகையை—ஆரியப் புராணக்கதையில் ஏற்பட்ட இத் தீபாவளிப் பண்டிகையை—இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையிடும் இத் தீபாவளிப் பண்டிகையை ஒழிப்பதற்கு வழி தேடவேண்டும். இவ்வாறான மூடச் சடங்குகளையும், பண்டிகைகளையும், வழக்கங்களையும், ஒழிப்பதில்தான் நமது விடுதலை அடங்கிக் கிடக்கின்றது.

---

# வடதிசையில்லாத வடதுருவம்.

## 12 மாதம் பகலுள்ள பனிப்பிரதேசம்.

ரஸ்ஸல் ஓவன் என்ற அறிஞர் "நியூயார்க் டைம்ஸ்மாக சைன்" என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:-

வடதுருவம் என்பது பூமியின் உச்சிப்பாகம். இது விகாடிய பனி மிகுந்த வடக்கு ஆர்ட்டிக் மகாசமுத்திரப் பிராந்தியத்தைச் சேர்ந்தது. அப்பகுதிகளில் தாங்கமுடியாத குளிர்; அவ்விடங்களில் மனிதர் வசிக்க முடியாது. அப்படிப்பட்ட பனிப்பிரதேசத்தை மக்களுக்குச் சிறந்த முறையில் உபயோகப்படுத்த வழியுண்டா என்பதைக் கண்டறிவதற்காக ருஷியர் அங்கு உள்ளே சென்று ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ருஷிய சர்க்காரும் அப்பெரிய முயற்சிக்கு ஆதரவளித்து வருகிறார்கள். அவ்வாராய்ச்சிக்காக கோடிக்கணக்கான பொருளை ருஷியர் செலவு செய்கிறார்கள்.

ஜனசஞ்சாரமற்ற பனி மிகுந்த வடதுருவத்தில் வாயு மண்டல ஆராய்ச்சி நிலையம் ஒன்றைக்கட்ட முயற்சி செய்து வருகிறார்கள். அது சமுத்திரத்தில் மிதக்கக்கூடியதாக விருக்கும். பரந்த பெரிய பனிச் சமுத்திரத்தில் மூன்று கண்டங்களுக்கு மத்தியில் அந்த ஸ்தாபனம் அமையும். அவ்விடத்திலிருந்து வடதுருவப் பனிப் பிரதேசத்திற்கும் இதர வெளித் தேசங்களுக்கும் ஆகாய மூலமாகப் போக்கு வரத்து வசதிகளை ருஷியர் ஏற்படுத்தப் போகிறார்கள்.

இவ்வளவு பெரிய முயற்சி ஒரு புகழுக்காகவோ, பெருமைக்காகவோ, பெயருக்காகவோ செய்யப்படவில்லை. ஆனால் ருஷியர் புதிதாக ஒரு பெரிய ஆர்ட்டிக் பனிப் பிரதேச ராஜ்யத்தை சிருஷ்டிக்கப்போகிறார்கள். அதனால் ருஷியாவுக்கு அளவில்லாத செல்வ விருத்தி ஏற்படக்கூடுமென நம்பப்படுகிறது; அந்நாட்டின் வர்த்தகமும் வானமாகப் பெருகக்கூடுமென மென கருதப்படுகிறது.

வடதுருவம் என்பது என்ன வென்பதைப்பற்றி நாம் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். அது ஒரு சமுத்திரப் பகுதி. அங்கு எந்தக் காலத்திலும் பனி உறைந்துபோயிருக்கும். பல விடங்களில் பனிக்கட்டிகள் உடைந்து மிதந்து ஓடும். பூமியின் மேற்பரப்பில் பூகோள சாஸ்திர சம்பந்தமான கணித ஆராய்ச்சிக்குரிய இடம். அங்கு ஒருவர் மிகச் சொற்ப நேரத்தில் கடந்து பூமியைச் சுற்றி வந்துவிடலாம். அப்பிரதேசத்தில் ஒரு பகற்பொழுது ஒரு வருஷ காலம் நீடித்திருக்கும். அதாவது நம்முடைய ஒரு வருஷ காலம் வரையில் அங்கு பகலாகவே இருக்கும். அவ்விடத்திலிருந்து வடக்குத்திசை கிடையாது. எல்லாம் தெற்குத் திசையாகவே இருக்கும். இப்படிப்பட்ட பிரதேசத்தில் ஜனங்களுக்கு வசிக்கும் இடம் ஸ்தாபிப்பதும், அங்கு மனிதர் ஒரு வருஷ காலத்திற்கு வாழ்வதற்கான வசதிகளை அமைப்பதும், அப்பகுதிகளுக்கு மேலே பல கண்டங்களின் ஆகாய விமானங்கள் பல திசைகளிலும் பறந்து போகச் செய்வதும் சாமான்ய காரியமல்ல. அங்கு வாயு மண்டல ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவதும் ஒரு துணிகரமான வேலைதான். ஆர்ட்டிக் கடல்களுக்கு மேலே விமானப் போக்குவரத்து வழிகளை அமைப்பதும் இப்போதைக்கு சாத்தியப்பட்டதல்ல.

ஆனால் அவ்வேலைகளுக்காக வென்றே பிரத்தியேகமான சக்தியமைத்த புதிய விமானங்களும், இஞ்சின்களும் உண்டாக்கினால், கோரிய க்காரியங்கள் சித்தியாகாமல் போகா.

ஆர்ட்டிக் பகுதிகளில் புயல் காற்று வெகு சொற்பம். மூடுபனியும் அங்கு அதிகமில்லை. வாயுமண்டலத்தில் அமைதி அங்கு உண்டு. அப்பிராந்தியம் மிகப் பள்ளமானது; மிகக்கீழான ஸ்தலம். 12000 அடி தாழ்ந்திருக்கிறது. அவ்விடம் சைபீரியா, வட அமெரிக்கா ஆகிய பகுதிகளிலிருந்து சரிந்து வந்திருக்கிறது. ஊடே ஊடே ஆர்ட்டிக் தீவுகளின் உயர்ந்த குன்றுகளும், பீட பூமியும் காணப்படும். அவ்வழியாக உஷ்ணக்காற்று பனிப்பிரதேசத்திற்குள் நுழைகிறது. ஆனால் ஆர்ட்டிக் சீதோஷ்ண நிலை மிதமாகிறது. அப்படிப்பட்டப் பகுதியில் தான் வடதுருவம் இருக்கிறது.

அந்தப் பனிப் பகுதிகளில் புல் பூடு முதலிய தாவர வர்க்கமே கிடையாது. கல்ல கோடை காலத்திலும் பனிக்கட்டி

களுக்குள் தான் மனிதர் பாதங்கள் புதையும். உயிர்ப்பிராணி களும் அங்கில்லை. ஏதோ சில 'சீல்' என்ற பிராணிகளும், வெள்ளைக் கரடிகளும் தான் அங்குண்டு. கரைபோன்ற உட் பகுதிக்குள் ஏதோ ஒருவிதமான நீர்ச்செடி பனியால் வளர்ச்சி குன்றிக்காணப்படும். ஆனால் அதை அடுத்துள்ள பூமி பாகம் கோடை காலத்தில் சற்று உஷ்ணமாயிருக்கும். அந்த உஷ்ணத்தால் தான் ஆர்ட்டிக் பனிக்கட்டி உடைந்து ஓடுகின்றது. அந்த உஷ்ணப் பிரதேசத்தைத்தான் ருஷியர் பயிர் செய்வதற்கு உபயோகிக்கப் போகிறார்கள்.

வட துருவப் பகுதிகள் ஆகாய விமான நிலையங்களுக்கு லாயக்கானதல்ல. உறைந்து கெட்டியாயிருக்கும் இடம் திடீ ரென்று எதிர்பாராத நிலைமையில் கரைந்து ஓட ஆரம் பித்து விடும். உடைந்து போன பரப்பின் பாகங்களை நீரோட்டம் நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் அடித் துக் கொண்டு போய்விடும்.

ருஷிய விமானிகள் அது போன்ற ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றனர். 1925-ல் ஒரு ருஷிய விமானம் அப்படிப் பட்ட ஆபத்தொன்றிலிருந்து வெகு கஷ்டப்பட்டுத் தப்பிற்று. துமுதல் அப்பிராந்தியத்திற்கு ஆராய்ச்சிக்காகப் போகும் காய விமானங்களுக்கு ஆபத்து நேர்ந்தால், உடனே உதவி னுப்புவதற்கான விமானப் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஷியர் தயாரில் வைத்துக்கொண்டிருக்கின்றனர். அதற் ாக ஆகாய விமான அமைப்புகள் போளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகாயவசனி வசதிகளும் அதிக மாய் முன்னேற்றமடைந்திருக்கின்றன.

ருஷிய ஆராய்ச்சி கோஷ்டி பனி மிகுந்த வடதுருவத் திற்குச் சமீபத்தில் இருந்து பரீட்சை நடத்திக்கொண்டிருக் கிறது. ஒரு வருஷ காலமாக அக்கோஷ்டியினர் அங்கு இருக் கிறார்கள். அங்கு ஏற்படும் பருவ கால மாற்றங்களைக் கவனித்து வருகிறார்கள். குளிர் காற்று மாறும் சந்தர்ப்பங் களைக் குறித்துக் கொள்ளுகிறார்கள்.

பனிப்பிரதேச பரிசோதனை கோஷ்டியார் பனிக்காட் டில் கூடாரங்களைத்தான் வீடுகளாக உபயோகிக்கிறார்கள். கூடாரங்களைச்சுற்றி பனிக்கட்டிச் சுவர்கள் அமைத்துக்

கொள்ளுகிறார்கள். பற்பல விடங்களுக்கு அவர்கள் தங்களுடைய கூடாரங்களை மாற்றிக்கொண்டே போவார்கள் என்று தெரிகிறது. ஆனாலும் பனிக் காலத்தில் இடம் மாற்றுவது மகா கஷ்டமாயிருக்கும் என்று சொல்லப் படுகிறது.

பரிசோதனைக்காரர்கள் கூடாரமடித்துத் தங்கியிருக் கும் இடப்பரப்பு திடீரென்று வெடித்து பிதந்துகொண்டே போய் விடுதலுமுண்டு. அப்போது சில சமயங்களில் அவர் கள் தங்களுடைய உணவுப்பொருள்களையும், கருவிகளையும் இதர சாமான்களையும் இழக்க நேர்ந்து போவதுமுண்டு. 'சீல்' என்னும் பிராணிகளும் வெள்ளைக்கரடிகளும் அவ் வுணவுகளைத் தின்று விடுவதுண்டு. இது போன்ற அபாய சந்தர்ப்பங்களில் உதவி செய்வதற்காக ருஷியர் உதவி விமா னங்களைத் தயாரில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகாய விமானங்கள் தங்குவதற்கு ஏற்ற இடங்கள் அங்கு இல்லையென்றாலும் அப்பகுதிகளின் மேல் விமானங்கள் பறப்பதற்கேற்ற ஆகாய நிலை இருக்கிறதாவென்று முதலில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் மூலமாக பிரஸ்தாப பனிக்கடலின் தன்மையை நன்கு ஆராயலாமென கருதுகிறார்கள். இனி வடதுருவப் பிரதேசத்திற்கு ஆகாய விமானங்கள் மூலமாகவே பிரயாணம் செல்வார்கள். ரேடியோ உதவி எப்போதும் கூடவே இருக்கும். பனிப் பிரதேச எல்லைக்குள் பிரவேசிக்க, சென்ற 100 வருஷ காலமாக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது என்றாலும் அத்தனை வருஷ காலங்களில் ஏற்பட்ட நன்மை கள் எல்லாம் சேர்ந்தாலும், இக்கால முயற்சிக்கு ஒரு சிறிதும் ஈடாகாது.

இது வரையில் வடதுருவப் பிரயாணத்திற்குப் பல வரு ஷகாலம் பிடித்தது. சென்றவர்கள் அபாயத்திற்குள்ளா னார்கள். பலர் உயிரையும் இழந்தார்கள். திருப்திகரமான வெற்றி எதையும் காண வில்லை. பனிக்காடுகளின் இயல்பு களை இதுவரையில் யாரும் நன்கறிந்ததில்லை. அங்குள்ள கஷ்டங்களும் யாருக்கும் தெரியாது. அங்கு செல்ல எப்படிப் பட்ட கப்பல்கள் அமைக்கவேண்டு மென்பதையும் ஒரு சிலரே அறிந்திருந்தனர்.

பீரி என்ற ஒரு அறிஞர் துருவ யாத்திரை செய்வதற் கென்றே, எஸ்கிமோ ஜாதியார்களைப்போலவே வாழப்பழ

கிக்கொண்டார். கான்சென் என்ற மற்றொரு மேதாவி பனிப் பகுதிகளை ஊடுருவிப் பிரயாணம் செய்யத்தக்க புதுமாதிரி யான கப்பல்களைக் கட்ட யோசனை சொன்னார். பிரயா ணத்திற்கும் ஆராய்ச்சிக்கும் அவசியமான நூதன கருவி களையும் அவர் சேகரித்தார். ஒரு புதிய பனிப்பிரதேசக் கண்டம் இருக்கிறதென்ற தீர்மானத்தையும் உறுதிப்படுத்தி னார். கப்பல் மார்க்கமாகப் பல மாதங்களிலும், பல வருஷங் களிலும் செய்யப்படும் பிரயாணத்தை ஆகாய விமான மூல மாகச் சில மணி நேரத்திற்குள் முடித்து விடலாமென அவர் கண்டார். தற்காலம் வடதுருவப் பரிசோதனை வேலையால் ஏற்பட்டிருக்கும் பிரதான முற்போக்குப் பகுதி இதுதான்.

ஸ்பிட்ஸ் பெர்கன் என்ற தீவிலிருந்து இதற்கு முன் பு அநேக விமானிகள் பனிப்பிரதேசம் நோக்கிச் சென்று விபத் திற்குள்ளாயிருக்கிறார்கள். அத்தீவு பனிப்பிரதேச எல்லை யை ஒட்டி யுள்ளது. அது இப்போது ருஷியாவுக்கு நிலக் கரி சப்ளை செய்யும் ஊராயிருந்து வருகிறது.

வடதுருவப் பிரதேசங்களில் இன்னும் மனிதன் காணாத அநேக தீவுகள் இருப்பதாக இதுவரையில் நடந்த பரிசோ தனைகளிலிருந்து தெரிய வருகிறது.

ருஷியாவின் வடபாகத்தில் மரம் ஏராளமாக உண்டு. தங்கம் அபரிமிதமாக உற்பத்தி செய்யப்படுகிறது. எண் ணெய் ஊற்றுகளும் அதிகம். அநேக விதமான உலோகங்கள் அகப்படுகின்றன. அவை யாவும் தற்காலக் கைத்தொழில் களுக்கு மிகவும் உபயோகமாகக் கூடியவை. இவைகளைத் தவிர மிருக உரோம ஏற்றுமதிக்கும் நல்ல வசதிகள் இருக் கின்றன. இவைகளை யெல்லாம் அமெரிக்காவுக்கு பனிப்பிர தேச வழியாக அனுப்பி வியாபாரம் செய்தால் ருஷியாவுக்கு மிகப்பெரிய இலாபம் கிடைக்குமென்று கருதப்படுகிறது. இதற்காகவே ருஷியர் வடதுருவப் பிராந்தியங்களைப் பரி சோதிக்க முனைந்து நிற்கின்றனர். சைபீரியா கடற்கரை நெடுக பனிப்பிரதேசத்திற்குள் ஒரு புதிய கடல் வழி காணப் பட்டு வருகிறது. அது வடகிழக்குப் பாதையாகும். அவ் வழியே சென்ற வருஷம் பனி உடைக்கும் இயந்திரங்களின் உதவி கொண்டு 14 கப்பல்கள் பிரயாணம் செய்திருக்கின்றன.

இனி ருஷியாவிலிருந்து அமெரிக்காவுக்கு புதிய ஆகாய விமானப்பாதைகள் வகுக்கப்படும். ருஷியாவின் மேற்குப்

# வைதிகன் யார்?

(ஆர். வி. கார்வி.)

மேனாட்டுக்கலை நம் நாட்டில் வந்திலிருந்து நம் நாட்டுப் பழைய ஆச்சாரங்கள், அனுஷ்டானங்கள் எல்லாம் அழிந்துபோயிற்றே யென்று ஓலமிடுகிறவர்களை "உங்கள் பழமையான ஆசாரங்கள் தான் என்ன? அவைகளின் லக்ஷணங்கள் தான் என்ன? உங்கள் ஹிந்துதர்மந்தான் என்ன? அவைகளை சற்று விளக்குங்களே" என்று சவால் கூறினால் போதும். அவர்கள் வாயை அடைப்பதற்கு, ஆரியக்கலையைத் தான் மேற்கோளாக எடுத்துக்காட்ட முன் வருவார்கள். இப்பொழுது நம்மை பழிக்கிறவர்கள் ஏதோ பழைய ஆச்சாரத்தை பின்பற்றுவது போல் பாசாங்கு செய்கிறார்களே யொழிய உண்மையில் அவர்கள் செய்வதெல்லாம் நமது செய்கைகளை சிறிது மாற்றிச் செய்வதேயாகும்.

பழைய கோட்பாடுகள் என்ன என்று ஒருவன் ஆராயத் தொடங்கினால் எந்தக்காலம் வரை? என்பது பெரிய பிரச்சினையாயிருக்கிறது. ஆனால் மிக ஆச்சாரக்காரர்கள் எனப்படுபவர்கள் தற்கால பழக்க வழக்கங்களுக்கு ஆதாரமான காலத்தோடு நின்று விடுகிறார்கள். அது சரிதான், அது மிக சௌகரியந்தான். ஆனால் அது யோக்கியமான காரியமாகுமா? பழைய பழக்க

---

பாகத்திலிருந்து பேரிங் ஜலசந்திக்குப் போகும் பாதை வடதுருவத்தை யொட்டி சைபேரியா பக்கம் செல்லும். மேலருஷியாவிலிருந்து மத்திய அலாஸ்காவுக்குப் போகும் பாதை தருவத்தின் அமெரிக்கா பக்கமாகச் செல்லும். லெனின்கிராட் நகரத்திலிருந்து அமெரிக்க நியூயார்க் நகரத்திற்குப் போகும் பாதை ஐஸ்லந்தின் தென் பாகத்தின் மத்தியாகச் செல்லும். இவ்வேலைகள் யாவும் இன்னும் சுமார் 30 வருஷ காலத்திற்குள் பூர்த்தியாகலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்கங்களுக்கு மரியாதை செலுத்த வேண்டுமானால் எவ்வளவுக்கெவ்வளவு பழைமையாயிருக்கிறதோ அதற்கல்லவா மதிப்பும் மரியாதையும் கொடுக்கவேண்டும்? இதுதானே நியாயமானது! இந்த நியாயவாதப்படிப் பார்த்தால் பழைமையான பழக்க வழக்கங்கள் அறிவுக்கு பொருந்தாதனவைகள் என்பது நன்கு விளங்கும். பரிணாமவாதத்தின்படி கமது மூதாதைகளின் அதாவது ஆதிமனிதனாகிய வாலில்லாக் குரங்கின் பழக்கவழக்கந்தான் பழமையான மனிதனது பழக்கவழக்கம் என்பதாகுமல்லவா?

ஆனால் வைதிகர் இதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. இவ்விதமான கஷ்டமான சிக்கலான கேள்விகளுக்கும் பதில் சொல்லவேண்டிய கஷ்டமும் அவர்களுக்கில்லை. ஏன்? இவ்வுலகம் சில ரிஷிகளாலே உற்பத்தியானது என்று கற்பனை செய்துவிட்டார்கள். இந்த ரிஷிகளுக்கு நன்மை தீமை அறியும் சக்தியிருந்தால் அவர்களது செய்கையைத்தானே பின்னால் வருகிற மனித சந்ததி பின் பற்றியிருக்கவேண்டும்? இந்த வாதத்தின் படியே பழைமையான அந்த ரிஷிகள் செய்கை பின்னால் வந்தவர்களின் செய்கையைவிட மேலாகத்தானேயிருந்திருக்கவேண்டும். ஆனால், இதுவும் வைதிகர்களுக்கு உடன்பாடாயில்லை ஆதியிலே ஹிந்துக்கள் மாமிசத்தையும், அதிலும் பசுவின் மாமிசத்தையும் தின்று வந்திருக்கிறார்கள். நரமாமிசத்தைக்கூட தின்றிருப்பதாக சமஸ்கிருத சாஸ்திரங்களிலே காணப்படுகிறது. பிற்காலத்திலே இவைகள் கைவிடப்பட்டுப்பட்டு விட்டன. கோதோஷம் ஜைனர்களிடமிருந்துதான் பின்பற்றப்பட்டது. ஆனால் ஹிந்துக்கள் தங்களுடையதென்று பாசாங்கு காட்டிக் கொள்கிறார்கள்.

பகுத்தறிவு வாதிகளோ பசுவைக் கொல்வது புனிதத் தன்மை என்று சொல்லாமல் நமக்கு பால் கொடுத்துதவும் மிருக மாதலால் அதை கொல்லக்கூடாது என்று கூறுகிறார்கள். பால் கொடுத்துதவுகிற எருமைகளையோ, மிக பிரயோஜனமான குதிரை, நாய் முதலிய மிருகங்களையோ ஹிந்துக்கள் மதிப்பதேயில்லை. தெளிவாகச்சொல்ல வேண்டுமானால் நாயை அசுத்த மான பிராணி என்று கூறுகிறார்கள்; ஆனால் பசு அவ்வளவு அசுத்தமான மிருகமல்ல.

பழைய பழக்க வழக்கங்களைக் குறித்துப் பேசினால் சில பழக்கங்கள் கலியுகத்துக்கு ஏற்றதல்ல என்று கருதப்பட்டிருக்கிறது என்று மிக சாமர்த்தியமாக வைதீர்கள் சொல்லித் தப்பித்

துக் கொள்ளுகிறார்கள். ரிக் வேதத்திற்கு பின்னால் எழுதப் பட்ட நூலில் தான் உலக தோற்றத்தை 4 யுகங்களாக அதாவது கிரேதா, திரேதா, துவாபரா, கலி என்பவைகளாகப் பிரித்திருக் கிறார்கள். முதல்யுகத்தில் மக்கள் மிக யோக்கியர்களாக இருந்த மாதிரியும் பின்னால் படிப்படியாக ஒவ்வொரு யுகங்களில் ஒழுக் கங்கெட்டு வந்துவிட்டார்கள் என்றும் கடைசியில் இந்த கலியுகத் தில் மிகமோசமாய்விட்டார்கள் என்றும் கதைகட்டிவிட்டார்கள். இந்தவிதமான யுகங்களை சிருஷ்டித்துவைதீகர்களை காக்க முன் வந்தவர்களின் மூளையே மூளை!

1936 செப்டம்பர் மாதம் வெளி வந்த "பி. பி. ராயல் ஆஸ் யாட்டிக் சொசைட்டி" என்ற சஞ்சிகையில் "தர்மத்தைப்பற்றி சிக்கலான கிரந்தங்களுக்கு வியாக்கியானம் கொடுக்க இந்த நான்கு யுகங்களும் சுலுவான ஆயுதங்களாக விளங்குகின்றன.

கிரேதாயுகத்திலும், திரேதாயுகத்திலும், துவபாரயுகத்திலும் நடந்துவந்த மதவழிபாடு வேறு என்றும் கலியுகத்தின் வழிபாடு வேறு என்றும் ஒவ்வொரு யுகத்திலும் தர்மத்தின் தளர்ச்சிக்கு ஏற்றவாறு வழிபாடுகள் இருந்துவருகின்றன என்றும் ஒரே வார்த் தையால் தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

எந்தவிதமான பழைய வழக்கங்களாயிருந்தாலும் இப்பொழு துள்ளவர்களுக்கு திகைப்பை உண்டு பண்ணுவதாயிருந்தால் உடனே அவைகள் இக்காலத்தில் மன்னிக்கக்கூடியவையென்றும் அநாகரிக காலத்திற்கேற்றவை யென்றும் கூறியிருக்கிறார்கள். இதனால் வந்த பின் மிக வேடிக்கையானது.

பாசர் தன்னுடைய ஸ்மிருதியில்தான் கலியுகத்துக்கு ஏற்ற வழிபாடுகள் அடங்கி இருக்கிறதென்று கூறியிருக்கிறார். இறந்ததற்கும் பிறந்ததற்கும் மனிதன் அனுசரிக்கவேண்டிய தீட்டை வேதங்கள் காலத்திலிருந்ததைவிட எவ்வளவோ குறைத்துவிட்டார். ஒரு பெண் தனது கணவன் காணாமற்போ னாலும் அல்லது இறந்துபோனாலும் அல்லது பைத்தியம் பிடித் துத் திரிந்தாலும் அல்லது மஹா பாதகத்துக்கு உள்ளாயிருந்தா லும் மறு மணம் செய்துகொள்ள அனுமதியளிக்கிறார்; இடையர் கள், நாவிதர்கள், தாசர்கள் (அடிமைகள்) முதலியவர்கள் சமைத்த உணவுகளை பார்ப்பான் உண்ண அனுமதியளிக்கிறார்; ஆனால் இந்த பழக்கங்கள் பின்னால் தோன்றி எழுதியவர் களால் கலியுகத்தில் ஆகாது என்று கண்டிக்கப்பட்டு தடுக்கப்பட் டிருக்கின்றன."

இதனால் தான் பாசர் எவ்வளவோ தயவாகவும் தாசனாகவும் எழுதியிருந்தும் ஹிந்துஸ்திதவைகள் மறுமணஞ்செய்து கொள்ள பிரிட்டிஷ் சர்க்கார் சட்டமிபற்றவேண்டியதாயிற்று.

தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து சமைத்த ஆகாரங்களை உண்ண பார்ப்பனர்கள் இன்னும் பின் வாங்குகிறார்கள். இக் காலத்தில் இவர்கள் செய்கிறகாரியங்களுக்கு எந்தவிதமான ஆதாரத்தைக்காட்டியேனும் தப்பித்துக்கொள்கிறார்கள். பழைய ஹிந்துக்கள் பழக்க வழக்கங்களை ஆரியக் கலைகளிலிருந்து தோழர் கன்னி விளக்கிக் காட்டியிருக்கிறார். அவைகளைக் கண்டு மக்கள் இன்று இந்த கலியுகத்தில் வெட்கப்பட வேண்டியிருக்கின்றது.

உதாரணமாக ஒரு மனிதன் புத்திரப்பேறு இல்லாமல் மரித்தால் அவனது மனைவி தனதுகணவனின் மூத்த சகோதரனைக் கலந்து புத்திரப்பேறுபெறலாம். இந்தவழக்கத்துக்கு "நியோகா" என்று பெயர். இது விபசாரத்தனமாக கருதப்படவில்லை. இதைவிட மிக மோசமான சம்பவம் மஹாபாரதத்திலிருக்கிறது. அதாவது பாண்டு ஏதோ ஒரு சாபத்தால் மனைவியை தொட்டால் மரணமடைவானென்றிருந்ததால் தன் மனைவியை பல 'கடவுள்' களைப்புணர்ந்து புத்திரப் பேற்றை பெற வற்புறுத்தினான். அதன்படியே அவள் ஐந்து வீரர்களை பெற்றெடுத்தாள் என்று சொல்லப்படுகிறது.

இது போன்ற வழக்கம் பைபிலிலும் காணப்படுகிறது.

கலியுகத்தில் எவ்வளவோ ஒழுக்கங்கெட்டுவிட்டன என்று வைதீகர்கள் ஓலமிட்டாலும் இத்தகைய வழக்கங்களை இந்தக் கலியுகத்தில் நாம் காணமுடியாது.

அக்காலத்தில் "சிரார்த்த"ச் சடங்குகளில் மாமிசமும் ஓயினும் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இந்த ஆசார முறை இன்று கையாளப்படுவதில்லை.

வேறு வழியில் பிறக்கும் குழந்தைகள் இன்று நியாயமாகப் பிறந்த குழந்தைகள் அல்ல என்று கருதுகிறோம். ஆனால் இவைகள் அந்நாளில் நியாயமாகப் பிறந்த குழந்தைகள் என்று கருதப்பட்டு வந்தன.

அக்காலத்தில் சில பழக்க வழக்கங்கள் ஒழுங்கானவைபாகவும், நீதியானவையுமாக கருதப்பட்டு வந்தன. ஆனால் அவைகள்

இன்று மிக ஆபாசமானவைகளாக கருதப்படுகின்றன. அவை களைக்குறித்து தோழர் கன்னி குறிப்பிட்டிருக்கிறார். இக்குறிப்பு கள்வாசிக்க மிக வேடிக்கையாயிருக்கின்றன.

உதாரணமாக ஒரு பார்ப்பனன் கீழ் ஜாதியிலுதித்த எந்தப் பெண்ணை வேண்டுமானாலும் மணம் புரிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு பெண் அவ்வாறு செய்யக்கூடாது. அந்நாளில் ஒரு பார்ப்பனன் மூர்க்கனாகில் அவனைக் கொன்று விடுவார்கள். அது ஒரு பாவமாக கருதப்படமாட்டாது. ஆனால் கலியுகத்தில் எக்காரணத்தைக்கொண்டும் ஒரு பார்ப்பனனைக் கொல்லக் கூடாது. கொல்வது பெரிய பாவமாகக் கருதப்படுகிறது.

ஆனால் இந்த பாச்சா பிரிட்டிஷ் ஆட்சியில் பலிப்ப தில்லை. கடல் யாத்திரை சென்று திரும்பினவுடன் ஏதோ பிராயச்சித்தம் செய்து விட்டால் அதனால் ஏற்பட்ட தோஷம் தீர்ந்துவிடுவதாக பார்ப்பனர் கருதுகிறார்கள். ஆனால் இதனால் எல்லாம் இன்று ஒருவன் சுத்திகரிக்கப்பட முடியாது.

இன்னொரு விநோதமான வழக்கமும் இருந்து வந்திருக் கிறது. அதாவது ஒருவன் இவ்வுலகத்தில் தன்னால் யாதும் பய னில்லை என்று உணர்ந்து கொண்டால் தற்கொலை செய்து கொள்வது என்பதாகும். இந்த முறையை அநேக அரசர்கள் கூட அனுஷ்டித்து தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது ஒருவன் முதிர்ந்த வயதையடைந்து விட்டால் அவன் தன் போக பாக்கியத்தை யெல்லாம் மறந்து நீண்ட யாத்திரை யாகப் புறப்பட்டுச்சென்று கங்கையில் மூழ்கியோ அல்லது செங்குத்தான மலைச் சிகரங்களிலிருந்து கீழே குதித்தோ தனது உயிரை மாய்த்துக் கொள்ளுவான்.

இந்த அநாகரீக வழக்கம் கலிகாலத்தில் செல்லாது என்று அறியாமல் பிந்தின சந்ததியால் ஏமாற்றமடைந்த ஒரு கிழவர் தோழர் கே. எம். முனிஷி படத்தில் இவ்வழக்கத்தைப் பின்பற் றியிருக்கிறார்கள்.

இன்று தடுக்கப்பட்டுள்ள வழக்கங்களில் முக்கியமானது பசுவைக் கொலை செய்வதாகும். பிறத்தலினாலோ, இறத்தலி னாலோ ஏற்படுகிற தீட்டைப் போக்குவதற்காக பசுவை கொன்று யாகம் நடத்தி வந்தார்கள்.

விவாகமான மண மகனுக்கும் விருந்தினர்களுக்கும் மாமிசம்

அளிக்கப்பட்டு வந்தது. இறந்தவர்களுக்கு சாங்கியை செய்யும் போது மாமிசம் வைத்து படைக்கப்பட்டு வந்தது.

ஒருவனோடு ஓடிப்போனப் பெண்ணைக் கொண்டுவந்து ஒருவித சடங்கு செய்துவிட்டால் சுத்திகரிக்கப்பட்டு விட்டதாக கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று அவ்வாறு செய்வது முடியாத காரியம்.

அன்று பார்ப்பனர்களுக்கு 'சூத்திரர்'கள் சமைத்துப்போடலாம். ஆனால் இன்றோ அது செல்லாது.

கலி காலத்தில் பிரம்மச்சாரியம் தடுக்கப்பட்டிருக்கிறது.

நாம் எவைகளைச் சுட்டிக்காட்டினோமோ அவைகள் மறைந்துவிட்டன, இன்று நடந்து கொள்ளுகிற வழக்கங்கள் தான் மத சம்பிரதாயமாகப் பேசப்படுகிறது. இதிலிருந்து பழமையான எவ்வளவோ காரியங்கள் அரு வருக்கத் தக்கவைகள் என்பது விளங்கும். அப்படியிருக்க என் பழமையைக் குறித்து பெருமையடித்துக் கொள்ளவேண்டும் என்பது தான் நமக்கு விளங்கவில்லை. முதியோர்கள் காலத்தில் நடந்தவைகள் நியாயமானதும் தர்ம நீதியானதும் என்று சொல்லப்படுமானால் என் சில வழக்கங்களை ஒதுக்கி வைக்கவேண்டும்? என் அவர்களைப் போலவே நடித்தல் கூடாது? இதிலிருந்து மதவாதிகள்—வைதீர்கள் தர்க்க நீதியாக வாதத்திற்கு பதில் சொல்லமுடியாது என் பதும் ஹிந்து என்றால் என்ன என்பதை விளக்கவும் முடியாது என்பதும் நன்கு தெரியும்.

ஒரு ஹிந்து என்பவன் எந்தவிதமான கொள்கையையும் கொண்டிருக்கலாம்; எக்காரியத்தையும் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் வேறொரு மதத்தில் மாற்றப்படாதவரை அவன் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவன்தான்.

இனாலன்றோ டாக்டர் அம்பேத்காரும் அவரது சகாக்களும் மதம் மாறப்போவதாக ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள். எனினில் ஹிந்து என்று சொல்லிக்கொள்ளும் வரை அவர்களது கஷ்டம் நீங்குவதில்லை.

இந்தக் கொள்கைகளை ஒழிப்பதற்காகவே பகுத்தறிவாதிகள் மதத்தைக் கலை முழுச் சொல்லுகிறார்கள், ஆகவே மதத்தினால் தொல்லைப்படுகிற—கஷ்டப்படுகிற—கொடுமைப்படுகிறவர்களுக்கு மதத்தை விட்டு விலகுவதைவிட வேறு வழியில்லை.

---

# "ஜாலவித்தை"

(அப்பாவி.)

உலகமே ஒரு நாடகமேடை. விவசாயிகள், தொழிலாளிகள், முதலியவர் அதன் வேலைக்காரர்கள் அனைவரும்— "மிருகங்கள்" (அன்பர்கள் மன்னிக்கவேண்டும்) மகாராஜாக்கள், ஜமீன்தார்கள், மிட்டாதார்கள் முதலிய முதலாளிகள் பணக்காரர்கள் அனைவரும்— இவர்களை விரும்பியபடி கூத்தாடச்செய்யும் அதிகாரிகள்.

துஷ்ட மிருகங்களை எப்படி பட்டினிபோட்டு அரை குறையான உணவு ஊட்டி அவைகளின் ஆவேசத்தை அடக்கி சாட்டையும், சவுக்கும் வைத்துக்கொண்டு ஆட்டி வைக்கிறார்களோ அதைப்போலவே பணக்காரர்கள் ஏனையோரை கடவுள், மதம், என்ற சாட்டையையும், சவுக்கையும் கொண்டு மிரட்டி வேலை வாங்குகிறார்கள். மிருகங்கள் எப்படி நாளா வட்டத்தில் தங்களது பூர்வ நிலையை மறந்து அடிமைகளாகி அடங்கி ஒடுங்கி நடக்கின்றனவோ அதைப்போலவே ஏழைகளும் அடிமைகளாகி வாழ்கின்றனர்.

ஆதி காலத்தில் அதாவது நாகரிகம் தோன்றுவதற்கு முன் மனிதர்கள் இலைகளையும், மரப்பட்டைகளையும் உடுத்திக் கொண்டு குகைகளிலும் மரங்களிலும் வசித்து வந்தபோது இந்தப்பூமியும், இதில் விளையும் பொருள்களும் ஒருவருக்கும் சொந்தமாய் இருந்ததில்லையென்றும் மனிதர்கள் காய்களையும், வேட்டையாடிய மிருகங்களையும் புசித்துக் காலங்கழித்து வந்தார்களென்றும், பிற்காலத்தில் தான் பலிஷ்டர்கள் பூமியைத் தங்கள் சொந்த உடமையாக்கிக்கொண்டு பிறரைத் தமக்குழைக்கும் படி செய்து விட்டார்களென்றும் நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். அப்படிப் பூமியைப் பங்கிட்டுக்கொண்டவர்கள் தான் இன்று முதலாளிகளாக விளங்குகிறார்கள்.

மனிதனைத் தவிர இதர ஜந்துக்கள் இந்தக் கொடுமையைச் செய்யவில்லை. எல்லாம் எல்லாருக்கும் பொதுவென நடந்து

வருகின்றன. பசித்தபோது நீரில் வாழ்வனவோ, நிலத்தில் வாழ்வனவோ, பறப்பனவோ தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியே வந்து கிடைத்த ஆகாரத்தை உட்கொண்டு மீண்டும் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்றுவிடும். தனக்குப் பிற்காலத்திற்கு வேண்டுமென்றோ அல்லது தன்னுடைய பிள்ளை குட்டிகளுக்கு வேண்டுமென்றோ அவை ஒன்றும் சேமித்து வைப்பதில்லை. ஆகையால்தான் அவைகளுக்கு ஒருவிதப் பிரச்சினைகளுமில்லை. உணவுப் பிரச்சினையோ அல்லது வேலையற்றோர் துயரமோ, வியாபார நெருக்கடியோ பொருளாதாரச் சிக்கலோ ஆசியல் விவகாரங்களோ கடவுள் மத ஜாதிச்சண்டைகளோ கிடையாது. மனிதன் அத்தகைய வாழ்வு வாழ முடியாதெனினும் அவைகளிட மிருந்து அநேக பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியவனாக யிருக்கிறான்.

விசேஷப் பகுத்தறிவும் யோசிக்கும் தன்மையும் பெற்ற மனிதனாகிய இந்த பிரகஸ்பதி, தன்னுடைய வாழ்வை மிகவும் சிக்கலாக்கிக்கொண்டு அதிலிருந்து விடுபட வழிதெரியாது, திரு திருவென விழிக்கிறான். பண்டையக் காலத்தில் உணவு உற்பத்தி அதிகமாயில்லாததால் பஞ்சம் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படுவ துண்டு. தற்காலத்தை ஒரு விநோதமான காலமென்றே கூற வேண்டும். உணவுப்பொருள்கள் அதிகமாய் உற்பத்தி செய்து விட்டதால்தான் இந்த நெருக்கடி இப்போது ஏற்பட்டிருக்கிற தென்று கூறுகிறார்கள். ஒரு பக்கம் ஏழைகள் குடிக்க கஞ்சி யின்றி சாகிறார்கள்; மற்றொரு பக்கம் முதலாளிகள் உணவுப் பொருள்களைத் தீ மூட்டி எரிக்கிறார்கள். ஆகையால்தான் மக் கள் நலம் கோரும் அறிஞர்கள் இந்த உலகத்தை பயித்தியகார உலகமென்று கூறுகிறார்கள்.

பொருளாதார சாஸ்திரத்தைப் பணக்கார சாஸ்திர மென்றே கூறவேண்டும். முன்காலத்தில் ஒரு தேசத்தை இன் னொரு தேசத்தார், ஒரு ஊரை மற்றொரு ஊரார் முறியடித்து அதிலிருக்கும் பொருள்களைக் கவர்ந்து செல்லவேண்டும். தற் போது அப்படிச் செய்யவேண்டியதில்லை. தங்கள் ஊரிலிருந்து கொண்டே மற்றொரு ஊரிலிருக்கும் செல்வத்தையும் ஒரு நாட்டி லிருந்துகொண்டே இன்னொரு நாட்டின் பொருளையும் கப்பல் கப்பலாக வரவழைக்கலாம். கொழுக்கும் முதலாளிகளை மேன்மேலும் கொழுக்கச் செய்யவும் தற்காலப் பொருளாதார சாஸ்திரம் மிகவும் பயன்படுகிறது. இது ஏழைகளுக்கு விளங் காத "தலைவலி சாஸ்திர" மாயிருப்பதால் பணக்காரர்கள் இந்த

"மந்திரக் கோலை" வைத்துக்கொண்டு ஏழைகள் பணமெல்லாம் தங்களுக்கு வந்து சேரும்படி ஜாலவித்தை செய்துவருகிறார்கள்.

ஏழைமக்களாகிய மிருகங்கள் உலக சர்க்கஸ் அதிகாரிகளாகிய முதலாளிகள் கையிலுள்ள துப்பாக்கிக்கும் சாட்டைக்கும் பயந்து அடங்கிக்கிடக்கின்றன. அது வெற்றுத் துப்பாக்கியென்றும் அதுபொய்ச்சாட்டையென்றும் அறியவில்லை. உலகத்தின் இதர பாகத்திலிருப்பவர்கள் கண்விழித்து உண்மையை உணர்ந்துகொண்டார்கள். எல்லாருமாகச் சேர்ந்து முதலாளிகளை அடக்கி சுகம்பெற்றுவிட்டார்கள். இந்தியர்கள்தான் இன்றும் தூக்கத்திலிருக்கிறார்கள். முதலாளிகள் சிறுபான்மையோர். அவர்களுக்கு ஆயுதமைப்பட்டு பெரும்பான்மையோர் இருந்துவருகின்றனர். ஒரு பிடி அவல் கிடைத்தாலும் அதுதான் நமது தலைவிதியின்படி கிடைக்கவேண்டிய உணவு என்று நம்பி அதைக்கொண்டு அப்போதைய பசியை ஆற்றி திருப்தி அடையும் குணம் நம்மிடையே இருப்பதுதான் எல்லா முன்னேற்றத்திற்கும் முட்டுக்கட்டையாயிருக்கிறது. இந்தத் திருப்தி மதத்தாலும் கடவுள் நம்பிக்கையாலும் தான் உண்டாக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவே தான் இவை இரண்டும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யமைந்திருக்கின்றன என்று கூறுகிறோம். அவர்களுடைய முன் ஜென்மத்திய வினைகளால்தான் தற்போதைய செல்வந்தர்களாகவும் ஏழைகளாகவும் பிறக்கிறார்கள்; அல்லது கடவுள் அப்படி படைக்கிறார் என்று சொல்லுகிறார்கள். அந்த கடவுள் சட்டத்தை உடைத்தெறிந்த அறிஞர்களைப் போற்றாதிருக்க முடியுமா?

தோழர்களே! வெற்றுத் துப்பாக்கிக்கும், பொய்ச்சாட்டைக்கும் பயந்து இன்று அடங்கி அவதிப்பட விரும்புகிறீர்களா? அல்லது எல்லாவற்றையும் உடைத்தெறிந்து உங்கள் சுதந்தரத்தை அடையவிரும்புகிறீர்களா? கேட்பதற்கு காதுண்டு; பார்ப்பதற்கு கண்களுண்டு; சிந்திப்பதற்கு புத்தியுண்டு. விஷயத்தைச் சொல்லலாம், உண்மையைக்காட்டலாம், அதைக்கொண்டு சிந்தித்து நன்கு வாழ விரும்பினால் வாழுங்கள்; இல்லாவிட்டால் வீழுங்கள். உயிருடன் இருக்கவோ, சாகவோ உங்களுக்கு உரிமையுண்டு. கொடுமைகள் இழைக்கவேண்டாம்; சமாதான வழியில் விமோசனமடைய முயற்சிப்போம்.

கடைசியாக முதலாளிகளுக்குக் கூறுவது யாதெனில்-இது வரையில் கொடுமைப்படுத்தினீர்கள். மனிதர்களை மிருகங்களைப்போல நடத்தினீர்கள். விலைக்கு வாங்கவும் விற்கவும்

# இந்தியா ஒரு தேசமா?

19—9—37 தேதி கொல்லம்பாளையம் ரோடு "ஆச்சி வில்லாஸ்" கட்டிடத்தில் தோழர் ஏ. ரத்தினசபாபதி அவர்கள் தலைமையில் ஹிந்தி பாஷையை தமிழ் நாட்டில் கட்டாய பாடமாகப்புகுத்துவது பற்றி நடத்திய வாதப்பிரதி வாதத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசியதாவது:—

## தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொற்பொழிவு.

தலைவரவர்களே! தோழர்களே!

ஹிந்தியை நம் நாட்டில் பொது பாஷை ஆக்கப்பட வேண்டுமென்பவர்கள் அதற்கு ஆதாரமாக சொல்லி வரும் காரணங்கள் என்ன என்பதை நான் முதலில் குறிப்பிட்டு விட்டு அவற்றிற்கு சமாதானம் சொல்லி பிறகு அதன் கர்த்தாக்களின் உள் எண்ணத்தையும் அதனால் நமக்கு நேரக் கூடிய கெடுதியை யும் எனக்குப் பட்டவரை எடுத்துச் சொல்லுகிறேன்.

ஹிந்தி பொது பாஷையாகவும் பள்ளிக் குழந்தைகளுக்கு கட்டாய பாடமாகவும் வைக்கப்பட வேண்டியது அவசியம் என்று இப்போது எனக்கு முன்பேசிய இருவர்களுக்கு உள்ள சுதந்தரம் எனக்கும் உண்டு என்கின்ற முறையிலேயே நான் பேசுகிறேன். முதலில் பேசிய தோழர் கே. பி. பிள்ளை அவர் செய்தீர்கள். அடிமைகளாக்கி பெண்ணைப் புருஷனிடமிருந் தும், குழந்தையைத் தாயிடமிருந்தும் பிரித்தீர்கள்; காலை முதல் மாலை வரையில், ஏன்? இரவிலுங்கூட இடுப்பொடிய வேலை வாங்கினீர்கள்; போதிய உணவளிக்காது பட்டினி போட்டீர்கள்; ரத்தம் பீரிட்டுப்போகச் சாட்டை கொண்டு விளாசினீர்கள்; மிதித்தீர்கள்; முகத்தில் உமிழ்ந்தீர்கள்; இனி மேல் ஜம்பம் பலிக்காது இப்புவியில்.

கள் "ஹிந்தி அரசியலில் பட்டதல்ல வென்றும் அரசியல்பேச்சு இந்த விவாதத்தில் கலக்க வேண்டியதில்லை" என்றும்பேசிவிட்டு உடனேயே.

"நமக்குசுயாராஜ்யம் வேண்டும், அதற்கு ஒரு பொது பாஷை அவசியம், நம் தாய்நாடு இந்தியா, இந்தியாவுக்கு தாய்மொழி ஹிந்தி, இந்தியா ஒரு நேஷன், நேஷனல் பாஷை ஹிந்தி, நேஷன் என்பதே அதன் மதம் பாஷை ஆகியவற்றைப் பொறுத்தது, வகுப்பு மத உணர்ச்சி கூடாது, அதுமிக அற்ப விஷயம், இங்கிலீஷோ தமிழோ பொதுப் பாஷையாக ஆக முடியாது, மதராஸ் மாத்திரம் தனித்திருக்க முடியாது, மதராஸ் ஒரு நேஷன் அல்ல. இங்கிலீஷை புறக்கணிக்கவும் இப்பொழுது முடியாது, இந்தியாவை ரஷ்யாவாக்க முடியாது" என்றெல்லாம் சொன்னார். மற்றும் சில விஷயங்களும் சொல்லி கடைசியாக ஹிந்தியை கட்டாய பாடமாக்க வேண்டும் என்று கூறினார்கள்.

நான் அவற்றிற்கு தனி தனியாக சமாதானம் கூறிவிட்டு கடசியாக என் அபிப்பிராயம் கூறுகிறேன்.

இந்த விஷயத்தில் தோழர் கே. பி. பிள்ளை அரசியல் இல்லை என்றும் அரசியலை இதில் கலக்கக் கூடாது என்றும் சொல்லி விட்டு உடனே நாம் சுயாராஜ்யத்துக்கு பாடு படுகிறோம் ஆகையால் அதற்கு ஒரு பொது பாஷை வேண்டாமா என்றார். ஆகவே அவருடைய முதல் காரணமே அரசியலுக்கு ஆகவே ஹிந்தி வேண்டும் என்பதாகிறது.

## சுயராஜ்யம் என்றால் என்ன?

சுயாராஜ்யத்துக்கு ஹிந்தி வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிப் பின்னால் பேசிக்கொள்ளலாம். தோழர் கே. பி. பிள்ளை தயவு செய்து சுயராஜ்யம் என்றால் என்ன என்று விளக்குவாரா? புரோகிதன் வயிற்றுப் பிழைப்புக்கு மோக்ஷம் என்று அவனுக்கும் புரியாமல் நமக்கும் புரியாமல் வேண்டுமென்றே அர்த்தமும் கருத்தும் அற்ற சொல்லைக் கற்பித்து நம்மை ஏய்த்து வருவது போலவே புரோகிதத்தால் பிழைக்க வகை இழந்த மற்றொரு கூட்டத்தார் சுயராஜ்யம் என்கின்ற சொல்லைக் கற்பித்து மக்களை ஏய்க்கிறார்கள். மதத்தால் மடையர்களாக்கப்பட்ட ஒரு கூட்ட நம் பாமர மக்கள் அதை நம்பி ஏமாறுவதும் மற்றொரு வயிற்றுப் பிழைப்புக்கு வேறு நல்ல வகையற்ற ஒரு கூட்ட நம் மக்கள் அதைப் பிரசாரம் செய்து

வயிறு வளர்ப்பதுமல்லாமல் சுயராஜ்யத்துக்கு அருத்தமென்ன வென்று இப்போது கேட்கிறேன். பெரியதொரு அரசியல் ஞானி யென்று இந்தியா முழுவதும் பெயரெடுத்த தோழர் விஜயராக வாச்சாரியார் சமீபத்தில் தான் இதே கேள்வி கேட்டிருக்கிறார். அதுவும் "காந்தியோ நேருவோ அயங்கப்பனோ யாருமே இக் கேள்விக்கு இதுவரை பதில் சொல்லவில்லை" என்றுசொல்லி யிருக்கிறார்.

## ஜவஹர் தகிடுதத்தம்.

காங்கரஸ் பிரசிடெண்டு தோழர் ஜவஹர்லால் கூட சுயராஜ் யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அருத்தம் சொல்லவே இல்லை. ஆனால் அவர் சுயராஜ்யம் என்றால் ஒருசமயத்தில் எகாதிபத்திய எதிர்ப்பு என்பார். மற்றொரு சமயம் பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிப் பது என்பார். மற்றொரு சமயம்இந்தியாவை அந்நியர் ஆளப் படாது என்பார். மற்றொரு சமயம் ஜன நாயகம் என்பார். மற் றொரு சமயம் தொழிலாளர் ஆட்சி என்பார். மற்றொரு சமயம் குடியானவர் ஆட்சி என்பார். மற்றொரு சமயம் சமதர்மம் என் பார். மற்றொரு சமயம் பூரண சுயேச்சை என்பார். மற்றொரு சமயம் பட்டினியும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிவதே என்பார். மற்றொரு சமயம்உலகப் பொது உடமை என்பார். இப்படி இன்னமும் எவ்வளவோ விதமாக வாயில் வந்தபடி சம யத்துக்குத் தக்கபடி பேசுவார்.

## காந்தி பாஷ்யம்.

தோழர் காந்தியாரோ சுயராஜ்யத்துக்கு அருத்தம் ஒரு சம யத்தில் ராமராஜ்யம் என்பார். மற்றொரு சமயம் வருணாச்சிரம முறையை சரிவர அமைப்பதே என்பார். மற்றொரு சமயம் என் சுயராஜ்யத்தில் ராஜாக்களுக்கும் ஜமீன்தார்களுக்கும் இடம் உண்டு என்பார். மற்றொரு சமயம் அவரவர் சுதர்மத்தொழிலைச் செய்யச்செய்வதே என்பார். மற்றொரு சமயம் ராட்டினமே சுய ராஜ்யம் என்பார். மற்றொரு சமயம் எல்லோரும் கதர் கட்டுவதே சுயராஜ்யம் என்பார். கடைசியாக சென்ற மாதத்தில் "பிரிட்ட னுக்கும் இந்தியாவுக்கும் கடுகளவு மனக்கசப்பு ஏற்பட்டாலும் என் உயிரைக் கொடுத்தாவது அம்மனக்கசப்பை ஒழிப்பேன்" என்றார்.

இன்னமும் என்ன என்னமோ இந்த 20 வருஷ காலமாக பேசி வந்திருக்கிறார். மற்றபடியான "நம தருமை பாரதமாதாவின் புதல்வர்கள்" ஆன தேசபக்தர்களும் தேசிய வீரர்களும் "சுயராஜ்

யத்துக்கு ஆக உடல் பொருள் ஆவியை தத்தம் செய்த"வர் களுமான குட்டித் தலைவர்களும் தொண்டர்களும் போன மாதத்தில் தான் இந்திய சக்கரவர்த்தியான பிரிட்டிஷ் அரசர்க் கும் அவரது சந்ததிக்கும் அவரது ஆக்கினைக்கும் ஆட்சிக்கும் சட்ட திட்டங்களுக்கும் பக்தியாயும் விசுவாசமாயும்இருந்து கீழ்ப் படிந்து நடப்பதாக சத்தியம் செய்து கொடுத்து சர்க்கஸ் வளை யத்துக்குள் ஆட்டம்போடும் சிங்கங்கள் போல் இருந்து கொண்டு அந்நிய ஆட்சி எஜமண்டுக்கு அடங்கி நடந்து வருகிறார்கள்.

ஆகவே சுயராஜ்யம் என்றால்என்ன என்று தோழர் பி. கே. பிள்ளை இப்பொழுதாவது சொல்லட்டும் என்று கேட்கின்றேன். அன்றியும் அடுத்தபடியாக பிரிட்டிஷ் ஆட்சியையே ஒழித்து விடு வதாலேயே சுயராஜ்யம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிவிட முடி யுமா? பிரஞ்சுகாரர்கள் இந்தியாவில் ஒருபாகம் ஆளுகிறார்கள், போர்த்து கேசியர்கள் ஒரு பாகம் ஆளுகிறார்கள். இவர்களுக்கு ஒவ்வொரு தனி தேசங்களும் இருக்கின்றன. இத்தனைபேரும் ஒன்று சேர்ந்து ஒரு கை பார்க்காமல் ராட்டினை ஆயுதத்தைக்கண்டு பயந்து கொண்டு இந்தியாவை விட்டு விட்டு ஓடிவிடுவார்களா?

## உலகப் போக்கைப் பாருங்கள்.

இப்போது புகைந்துகொண்டு இருக்கும் யுத்தம் கிளம்பி முன் நடந்த உலக யுத்தமாக நடக்குமேயானால் நாம் (இந்தியா)யார் கைக்குபோவோம் என்றோ நம்மை (இந்தியாவை) எத்தனை பங்காகப்போட்டு யார் யார் எந்த எந்த மாகாணத்தை பங்கு போட்டு எடுத்துகொள்வார்கள் என்றோ சொல்லிவிட முடியுமா? இன்று ஸ்பெயின், சைனா படும்பாட்டையும், அபிசீனியா பட்ட பாட்டையும் துருக்கி ஈஜிபட்டு முதலியவை மகா யுத்தத்திற்குப் பிறகு பட்ட பாட்டையும் பார்க்கும்போது இந்தியா ஒரு தேச மாகுமா? அதற்கு சுயராஜ்யம் வருமா? என்பது விளங்கும்.

## பொது பாஷை அவசியமா?

தவிர சுயராஜ்யத்துக்கு பொதுபாஷை ஒன்றுவேண்டும் என் கின்ற அவசியம் என்ன?

ரஷியா பொது உடமை தேசம். அங்கு இன்னும் பொது பாஷை இல்லை. நம் நாடு என்பது அதாவது இந்தியாவானது அந்நிய ஆட்சிக்கு முன் ராமர் ஆட்சி என்று சொன்ன காலத் திலும், 56 தேசத்துக்கும் ஒரே சக்கரவர்த்தி இருந்ததாக சொல்

லப்பட்ட காலத்திலும் பொது பாஷை என்று ஒன்று இருந்ததாக ஆதாரமோ சரித்திரமோ ஒன்றும் காணவில்லை.

## தாய் நாடு எது?

அதற்கடுத்தாப்போல் இந்தியா நம் தாய் நாடு என்று சொல் வதற்குத்தான் ஆதாரம் என்ன இருக்கிறது? இந்தியா என்கின்ற பெயர் இந்த நாட்டுக்கு எப்போது ஏற்பட்டது? இதற்கு எல்லை என்ன? பர்மா போன வருஷம் பிரிந்துவிட்டது. அதற்கு முன் லங்கை பிரிந்துவிட்டது. அதற்கு முன் மலேயா பிரிந்து விட் டது. அதற்கு முன் நேப்பாளம்புத்தான் பிரிந்து விட்டது. அதற்குமுன் காந்தாரம் காபூல் (ஆப்கானிஸ்தானம்) பிரிந்து விட் டது. அதற்கு முன் பர்ஷியாஷ்யா பிரிந்துவிட்டது. இப்படியே எவ்வளவோ பிரிந்து எவ்வளவோ சேர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் தாய்நாடு எது? தகப்பன்நாடு எது? புராணகாலத்தில் 56 நாடுகள் இருந்தே, அப்போது ஒரு நாட்டுக்காரன் ஒரு நாட்டை தாய்நாடு என்று கருதினானா?

இப்போதும் நேற்று சட்ட சபையில் ஆந்திரர்கள் தங்களை தமிழ் நாட்டிலிருந்து பிரித்து தனி மாகாணமாக்க வேண்டுமென் கிறார்கள். மாகாண சுதந்தரம் கொடுத்து மாகாணத்துக்கு மாகா ணம் சர்வ சுதந்தரமாய் தன் தன் காலிலேயே நிற்கும்படியான நிலைமை ஏற்பட்டு ஐரோப்பா தேசத்தைப் போல் பாஷை வாரி யாக தனித்தனி நாடாகப் பிரிந்து கொண்டால் இந்தியா எப்படி எல்லோருக்கும் தாய் நாடாகும்? நேபால் நம் ஒரு ஜில்லாபோல் உள்ள விஸ்தீரணம். அவர்கள் இந்தியாவை தாய் நாடென்பார் களா? சையாமில் பெரிதும் இந்து மதம் தான். அவர்கள் இந்தி யாவைத் தாய் நாடென்பார்களா?

## ஐரோப்பா நிலைமை என்ன?

ஐரோப்பாவில் நார்வே, ஸ்வீடன், டென்மார்க்கு, ஹாலண்ட், பெல்ஜியம், போர்த்துக்கல், கிரீஸ் ஆகிய நாடுகள் நமது நான்கு ஜில்லா, மூன்று ஜில்லா, இரண்டுஜில்லா போன்ற விஸ்தீர ணமுள்ளவை. இவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் நாட்டைத் தாய் நாடு என்பார்களே ஒழிய ஐரோப்பாவை தாய் நாடென் பார்களா? ஆகவே தமிழ் நாட்டவர்கள் திராவிட மக்கள் எந்தக் காரணம் கொண்டு இந்தியாவை தாய் நாடென்று கூற வேண்டு

மென்பதும் எதற்காக இந்தியா பூராவும் எப்போதும் ஒரு குடை யின் கீழ் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட வேண்டும் என் பதும் எனக்கு விளங்கவில்லை. முதலாவது பாரத நாடு என்பதை யும், நாம் எல்லாம் பாரதர்கள் என்பதையும் கூட நான் ஒப்புக் கொள்ள முடியாது.

அடுத்தாற்போல் தோழர் பிள்ளை இந்தியாவுக்கு தாய் மொழி ஹிந்திதான் வெகுகாலமாக இருந்து வந்தது என்கிறார்.

## இந்தியாவுக்கு பொது பாஷை இருந்ததா?

ஹிந்தி பாஷை தமிழ் நாட்டில் எப்போது இருந்தது? பம் பாயில் எப்போது இருந்தது? வங்காளத்தில் எப்போது இருந்தது? இந்தியா 56 தேசமாய் இருந்தபோது 56 பாஷையின் பேரால் தானே தேசமாய் இருந்தது? அப்போதும் மொத்தத்தில் 56 பாஷைகள் இருந்திருக்கும். நாளாக நாளாக ஒரு தேசத்தார் மற் றொரு தேசத்தின்மீது ஆதிக்கம் செலுத்தும்போதும் ஒரு வகுப் பார் மற்றொரு வகுப்பார் மீது ஆதிக்கம் செலுத்தும் போதும் தான் அந்நிய பாஷை புகுத்தப்பட்டு விடுகிறது. அந்த முறை யிலேயே இன்று ஹிந்தியை தமிழ் நாட்டில் புகுத்தப் பார்ப்பது தமிழனல்லாத அந்நிய வகுப்பான் இன்று தமிழ் நாட்டில் ஆதிக் , ம் பெற்று விட்டதினாலேயே ஒழிய வேறில்லை.

தோழர் பிள்ளை இந்தியா ஒரு நேஷன் என்கிறார். நேஷன் என்று ஒரு தேசத்தையோ தேச மக்களையோ சேர்த்துச் சொல்வது அதன் மதம் பாஷை ஆகியவற்றைப் பொறுத்தது என்றும் சொல்லுகிறார்.

## இந்தியா நேஷனா?

அப்படியானால் இந்தியா ஒரு நேஷனா? அதற்கு பாஷை எது? மதம் எது? இந்தியாவில் எத்தனை மதம்? எத்தனை எத் தனை ஆச்சார அனுஷ்டானம்? முதலாவது இந்து மதம் என் பதை தமிழர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்களா? தோழர் கே. பி. பிள்ளை தன்னை இந்து என்று சொல்லுவாரானால் இந்து மத ஆதாரமாகிய வேதத்தையும் மனுதர்ம சாஸ்திரத்தையும் கீதையை யும் ஒப்புக்கொள்ளுகிறாரா? அதன்படி நடக்க இன்று சம்மதிக்கி றாரா? மற்றவன் நடக்கவாவது இவர் அனுமதிக்கிறாரா? இந்து மதத்தில் கே. பி. பிள்ளையின் இடம் எது? இந்து மதத்தால் தான் இந்தியா நேஷன் ஆயிற்றுஎன்றால் அதாவது நேஷனுக்கு மதமே பிரதானம் என்றால் இஸ்லாமியருக்கும் கிறிஸ்தவருக்கும்

பௌத்தருக்கும் பார்சிகளுக்கும் இந்தியா நேஷனாகுமா? எதைக் கொண்டு அவர்கள் இந்தியாவை நேஷன் என்பது?

பாஷையைக்கொண்டு நேஷன் பிரிப்பது என்றால் மாகாணம் ஒன்றுக்கு நான்கைந்து நேஷன் ஆகிவிடாதா?

தோழர் கே. பி. பிள்ளை அவர்கள் பொது விஷயங்களில் வகுப்பு மத விஷயங்கள் புகுத்தக்கூடாது என்கிறார். அன்றியும் அது மிகவும் அற்பமான் விஷயம் என்கிறார். யாருக்கு அற்பம் என்று கேட்கிறேன். நாஸ்திகனுக்கு வல்லவா மதம் வகுப்பு அற்பமாகும், அது கூடாததுமாகும்.

## தலைவர்கள் கூற்று.

இந்திய தலைவர் தோழர் காந்தியார் "இந்து மதத்துக்கு ஆக உயிர் வாழ்கிறேன், எனது மூச்சுகளே இந்து மதம், நானே இந்து மதமாய் இருக்கிறேன்" என்றார். முஸ்லீம் தலைவர்கள் தோழர்கள் மகமதலி ஷவ்கத்தலி, ஜின்னா ஆகியவர்கள் "நாங்கள் முதலில் முஸ்லீம், இரண்டாவது முஸ்லீம், மூன்றாவது முஸ்லீம் அப்புறம் தான் இந்தியன்" என்கிறார்கள். தோழர் ஜவஹர் லால் மதத்தையும் மத ஆதாரங்களையும் மத ப்ழக்க வழக்கங் களையும் காப்பாற்றிக் கொடுப்பதாக உத்தாவாதம் செய்து தலைவர் பதவி பெற்று இருக்கிறார். தோழர் சத்தியமூர்த்தியார் "நான் ஜெயிலுக்குப் போனாலும் போவேனே ஒழிய நாகத்துக்கு (இந்து மதத்துக்கு விரோதமாக) போகமாட்டேன்" என்று சொல்லி இருக்கிறார்.

மிகவும் அநித்தியமான இந்த அற்ப இக (உலக) வாழ்வு என் பதற்கு ஆக நித்தியமான பர(மேல்லோக) வாழ்க்கையைக் கெடுத் துக்கொண்டு வகுப்பும் மதமும் அற்பமானது, என்று எந்த யோக்கியமான ஆஸ்திகன் தான் சொல்லமுடியும். மதம் வகுப்பு அற்பம் என்று கருதி இருந்தால் ஜின்னாவுக்கும் ஜவஹர்லாலுக் கும் காந்திக்கும் ஷவ்கதலிக்கும் ராஜகோபாலாச்சாரிக்கும் நமக் கும் தகராறு என்? இவர்கள் அயோக்கியர்களா? சுயநலக்காரர் களா? பொதுவாழ்க்கையில் வயிறு வளர்ப்பவர்களா? வேறு வகை யில் யோக்கியதை அற்றவர்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

## ராமானந்த சட்டர்ஜி சாட்சியம்.

தனிய தோழர் பிள்ளை பொது பாஷை ஹிந்திதான் இருக்க வேண்டும் என்கிறார். அதுதான் அதிகம் மக்களால் பேசப்படு

கிறது என்கிறார். மாடர்ன் ரிவியூ எடிட்டர் ராமானந்த சட்டர்ஜி அவர்கள் காட்டி இருக்கும் கணக்குப்படி ஹிந்திபாஷை மெஜாரட்டி ஜனங்களாலோ அல்லது மற்ற பாஷை பேசுகிற தனித்தனி மக்களை விட அதிகமான மக்களாலோ பேசுகிறதில்லை என்று நன்றாய் விளங்குகிறது. அந்த பாஷையைப் பற்றியும் நல்ல அபிப்பிராயம் வட நாட்டாரே பலர் சொல்லுவதில்லை. அவை எப்படியோ இருக்கட்டும்.

ஒரு பொது பாஷை தெரிந்தெடுக்க மெஜாரிட்டி பலமே போதுமானதாகுமா? பாஷை எதற்குஆகவேண்டும்? பேசுவதற்கு மாத்திரம்தானா? புதிதாக ஒரு பாஷையை தெரிந்தெடுப்பதினால் அந்த பாஷை பழையது என்றோ வெகுபேர் பேசுகிறார்கள் என்றோ காரணம் சொல்லி தெரிந்தெடுப்பது அறிவுடமையாகாது. அந்த பாஷையால் தேச மக்களுக்கு ஏற்படும் பயன் என்ன என்று பார்க்கவேண்டும். புது அறிவு உண்டாகுமா? ஆராய்ச்சிக்கு பயன்படுமா? முற்போக்குக்கும் நாகரிகத்துக்கும் பயன்படுமா? சீர்திருத்தத்திற்கு ஏற்றதா? என்றெல்லால் பார்க்க வேண்டாமா? இவர்கள் சொல்லும் ஹிந்தி எதற்காக பயன்படும்? தோழர் ராஜகோபாலாச்சாரியாரும் அதாவது ஹிந்தியை பொது பாஷை ஆக்கவேண்டும். என்று சொல்லுகிறவரும் அவரது சகாக்களும் "ஹிந்தி துளசிதாஸ் ராமாயணம் படிக்கலாம், சமஸ்கிருதம் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம், இந்து மத சாஸ்திரம் உணரலாம்" என்றெல்லாம் சொல்லுகிறார். ஆகவே ஹிந்தி மூலம் மோட்சத்துக்கு போவதற்கு அனுகூலமாக ஆத்மார்த்த விஷயங்கள் என்பதற்குஅனுகூலமாக கார்ணம் சொல்லுகிறார்களே ஒழிய இந்த உலக வழிக்கு ஆன காரியம் எதுவும் ஹிந்தியில் இருப்பதாக சொல்லவே இல்லை- ராமாயணத்திலும் பாரதத்திலும் ஆகாய விமானம் இருக்கிறது. ஆனால் அது மந்திர சக்தியில் ஓடி இருக்கிறது. இங்கிலீஷில் ஆகாய விமானம் இருக்கிறது. அது யந்திர சக்தியில் ஓடுகிறது. நமக்கு எதுவேண்டும்? மந்திர சக்தியா யந்திர சக்தியா?

## இங்கிலீஷ் செய்த நன்மைகள்.

இங்கிலீஷ் நம்மில் சராசரி 100க்கு ஒருவர் இருவரே படித்திருக்கலாம் என்றாலும் அது 35 கோடி மக்களையும் நடத்துகிறது. இந்நாட்டு மனிதன் இன்று அடைந்துள்ள மேல் நிலைக்கு இங்கிலீஷே காரணம். தோழர் கே. பி. பிள்ளை பேசிய நேஷன் தாய் நாடு, சுயராஜ்யம், பொது பாஷை என்கின்ற உணர்ச்சியை —எண்ணத்தை இங்கிலீஷ் பாஷையே கொடுத்தது. அரசனுக்

குக் குடிகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் அரசனே கடவுள் என்றும் கருதி இருந்த ஹிந்தி இந்தியனை அரசன் குடிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்றும் அரசன் குடிகளின் சேவகன் என்றும் இங்கிலீஷ் இந்தியா தான் கற்றுக் கொடுத்தது. இன்று உலகப் பொது பாஷையாக இங்கிலீஷ் தான் கருதப்படுகிறது. அது பகுஜனங்களால் பேசப்படுகின்றது.

இந்தியா சுதந்திரம் பெற்று விட்டாலும் உலகசம்மந்தம் இல்லாமல் இந்தியா வாழ்ந்து விட முடியாது. வருங்கால உலகம் தேசத்துக்கு தேசம் நாட்டுக்கு நாடு இப்போது உள்ள தூரத்தில் இருக்காது, கூப்பிடு தூரத்தில் இருக்கப் போகிறது. ஹிந்திக்கு ஆகட்டும் வேறு இந்திய பாஷைக்கு ஆகட்டும் இனி அடுப்பங்கரையிலும், படுக்கை அறையிலும்கூட வேலை இருக்காது.

தொழிலாளிக்கும் தொழில் கருவியும் யந்திரமும் இங்கிலீஷ் பாஷையில்தான் இருக்கப்போகிறது. விவசாயிக்கும் அது போலவே. வியாபாரிகளுக்கும் அதுபோலவே. அரசியல் காரனுக்கும். அதுபோலவே தான்மோக்ஷம் போகத்துக்கு மாத்திரம் தான் ஹிந்தி உதவக்கூடும். ஆனால் மோக்ஷமும் வெகு சீக்கிரத்தில் மறைந்துவிடப் போகிறது.

மற்றும் தோழர் கே. பி. பிள்ளை என்னை பொது உடைமைக்காரன் என்கின்ற முறையில் பேசுவதாக நினைத்துக் கொண்டு இந்தியாவை ரஷ்யா என்று எண்ணிக் கொண்டு பேசக் கூடாது என்று குத்தலாகப்பேசினார். இந்தியா என் ரஷ்யாவாகக் கூடாது? இந்தியா ராம ராஜ்யமாக ஆகும்என்று தோழர் கே. பி. பிள்ளை கருதுகிறபோது இந்தியா ரஷ்யா ஆகும் என்று என் கான் கருதக் கூடாது? ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் அதிகத் தூரமில்லை 250 மைல்தான். வகுப்பும் மதமும் வெகு அற்பமானவை என்று உண்மையிலேயே இந்தியர்கள் கருதக் கூடிய நாள் வந்தால் அன்றே இந்தியா ரஷ்யா ஆகிவிடும். அது கூடாது என்பதற்கு ஆக செய்யப்படும் சூழ்ச்சிகளில் ஒன்று தான் ஹிந்தி முயற்சி என்று உறுதியாய்ச் சொல்லுவேன்.

## மதராஸ் ஒரு நேஷனா?

மதராஸ் ஒரு நேஷன் அல்லவென்றும் அது தனித்து இருக்க முடியாது என்றும் தோழர் கே. பி. பிள்ளை சொன்னார். மதராஸ் ஒரு தனி நேஷனாய் இருந்தது. இன்றும் இருக்கிறது. அது தான் திராவிடம். அதனுடையநாகரிகம் ஆச்சார அனுஷ்டானம்

வேறு. வங்காளம் பம்பாய் வேறு. இங்கிலீஷ் ஆட்சியால் இங்கிலீஷ் பாஷையால் தான் ஒன்றுக்கொன்று நேச பாவமான அறிமுகமாவது ஆகி இருக்கிறது. இங்கிலீஷ் ஆட்சியும் பாஷையும் ஒழிந்து ஹிந்தி ஆட்சியும் பாஷையும் வந்தால் அன்றே மதராசானது ஜர்மனி, இட்டாலி, பிரஞ்சு முதலிய ஏதோ ஒரு நேஷனுடன் கலந்து விடும்.

தோழர்களே! இதுவரை நான் கே. பி. பிள்ளை பேசியதற்குச் சமாதானம் சொன்னேன். இவற்றிற்கு தோழர் கே. பி. பிள்ளை தமது மறுமொழியில் சமாதானம் கூறுவார் என்று எதிர் பார்க்கிறேன்.

இனி பொதுவாக சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தியா பல மதம், பல வகுப்பு, பல தனிப்பட்ட லட்சியம் கொண்ட கோரிக்கைகள் உள்ள நாடு. இது உலகில் உள்ள மற்ற நாடுகளைப் போல் மதம், அரசியல், சமூக வாழ்க்கை முதலியவைகளில் ஒரே மாதிரி லட்சியமுடையதல்ல. கண்டிப்பாய் இந்து முஸ்லீம் லட்சியமும் பார்ப்பனர் பார்ப்பன்னல்லாதார் லட்சியமும் கீழ் ஜாதி மேல் ஜாதியார் லட்சியமும் வேறுவேறாகவே இருந்து வருகிறது. செல்வாக்கில்லாத லட்சியமுடையவர்களை செல்வாக்குள்ள லட்சிய முடையவர்கள் இழித்தும் பழித்தும் கூறி கேவலப்படுத்துவதாலோ கட்டுப்பாடாக உண்மையை மறைத்து பிரசாரம் செய்வதாலோ கூலிகளை ஏவிவிட்டு காலித்தனமாக நடக்கச்செய்வதாலோ எல்லோருடைய லட்சியமும் ஒன்று என்று சொல்லிவிட முடியாது.

உதாரணமாக இன்று பார்ப்பனர்கள் தங்கள் சமூகத்துக்கு என்று அனுபவித்து வரும் எந்த உரிமை—லட்சியத்தை விட்டுக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்?

அதுபோலவே முஸ்லீம்களும் தங்கள் சமூகத்துக்கு அல்லது மார்க்கத்துக்கு என்று அனுபவித்துவரும் எந்த உரிமை உணர்ச்சியை விட்டுக்கொடுக்க தயாராய் இருக்கிறார்கள்? அதுபோலவே பார்ப்பனரல்லாதாரோ அல்லது கீழ் ஜாதியார் என்பவர்களோ அனுபவித்து வரும் இழிவுகளையும் கொடுமைகளையும் நீக்க எந்த அளவுக்கு பார்ப்பனர்களும் மேல் ஜாதியாரும் சம்மதிக்கிறார்கள்?

## மேல் நாட்டு நிலைமை.

மேல்நாட்டில் இம்மாதிரியான சமூக, வகுப்பு, மார்க்கத் தொல்லை கிடையாது. குறிப்பாக நம் தென்னாட்டில் பார்ப் பனர்–பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற தொல்லை பல 1000க் கணக்கான வருஷங்களாய் இருந்து வந்திருக்கிறது. இன் றும் சுமார் 20 வருஷகாலமாய் பச்சையாய் வெளிப்படையாய் அரசியலிலும் உத்தியோக இயலிலும் சமுதாய இயலிலும் தலை விரித்து ஆடி வருகிறது. ஏன் இதைச் சொல்லுகிறேன் என் றால் இன்றையதினம் நாம் இங்கு வாதம் செய்யும் ஹிந்தி அதில் பட்டதினாலேயாகும். ஹிந்தி பாஷையும் அதன் கலை களும் தமிழ் நாட்டு மக்களுக்குக் குறிப்பாகப் பார்ப்பனல்லாத வனைய மக்களுக்கு ஜேர் மாறானதாக இருக்கின்றன. இதை நான் இன்று சொல்லவில்லை.

## சுயமரியாதையுடையவன் ஹிந்தியை ஆதரியான்.

1921ம் வருஷம் நான் பெரிய தேசபக்தனாய், தேசிய வீர னாய் இருந்துசிறை சென்று வந்த உடனே திருப்பூரில் கூட்டப் பட்ட தமிழ்மாகாண மகாநாட்டில்நான்சொல்லி இருக்கிறேன். அதாவது இன்று ஹிந்தியை தமிழ் மக்களுக்குள் புகுத்தி ஆக வேண்டும் என்று பலாத்காரம் செய்யும் தோழர் ராஜகோபாலாச் சாரியார் என்ன காரணத்துக்கு ஆக தமிழ் மக்கள் ஹிந்தி படிக்க வேண்டுமென்று சொன்னாரோ அந்தக்காரணமாகிய ராமா யணத்தைப் படிப்பதையும் மனுதர்மத்தை உணர்வதையும் குற்றம் என்று சொன்னதோடு அவைகளை நெருப்பில்போட்டு பொசுக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறேன். அன்று சொன்ன தைப்பற்றி கவலைஇல்லை. இன்று சொல்லுகிறேன். துளசிதாஸ் ராமாயணமானாலும் சரி, வால்மீகி ராமாயணமானாலும் சரி, கம்ப ராமாயணமானாலும் சரி, ஏதாவது ஒரு ராமாயணத்தை தோழர் கே. பி. பிள்ளை ஒப்புக்கொள்ளுகிறாரா? அதில் உள்ள தனது நிலையை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கிறாரா? அல் லது இங்குள்ள யாராவது ராமாயணத்திலும் மனுதர்மத்திலும் மற்றும் ஹிந்திபுராண சாஸ்திரங்களிலும் உங்களுக்கு உள்ள நிலையை ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? என்று கேட்கின்றேன். நான் அந்த தனிப்பட்ட புஸ்தகங்களில் உள்ள விஷயங்களைப் பற்றிக்கூட இப்பொழுது கேட்கவில்லை. இந்துமதம் என்பதில் இங்கு கூடியுள்ள உங்களுக்கு உள்ள நிலையை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? அப்படி இருக்க ராமாயணமும் புராணங் களும் இந்துமத சாஸ்திரங்களும் படிக்க ஹிந்தி உதவும் என்றால்

சுயமரியாதை உள்ள எவனாவது ஹிந்தி படிப்பதை ஒப்புக் கொள்ள முடியுமா?

## வடநாட்டுத் தென்னாட்டு விஷயம் ஒன்றா?

மற்றும் வடநாடும் தென்னாடும் ஒரே லட்சியமுடைய தாகுமா என்று உங்களைக் கேட்கின்றேன்.

வடநாட்டாரால் இதுவரை தென்னாட்டாருக்கு ஏற்பட்ட நன்மை என்ன என்று யாராவது விளக்கிவிட்டுச் சொல்லட்டும். நம் மக்கள் ஏமாற்றப்பட நமக்கு யோக்கியதை தெரியாத வடநாட்டாரைப் பிடித்து வந்து காட்டி வஞ்சித்ததல்லாமல் தென்னாட்டுச் சமூக சமய பொருளாதார அரசியல் முதலிய விஷயங்களுக்கு வடநாடு எதில் பயன்பட்டது? நம் நாட்டுக்கு அழைத்து வரும்போது வடநாட்டவர்களை இந்திரன், சந்திரன், வீரன், சூரன், தியாகி, சத்தியவான், மகான் என்று விளம்பரம் செய்கிறார்கள். அவர்களைப்பற்றி அந்த உள்ளூர்காரர்களைக் கேட்டால் அவர்களுக்கு மிஞ்சிய மோசமானவர்கள் எந்நாட்டிலுமில்லை என்கிறார்கள்.

## வடநாட்டுச் சம்பந்தம் வேண்டாம்.

ஆகவே நாம் ஏமாறுவதற்குத்தான் வடநாடு உபயோகப்படுகிறது. இன்றைய அரசியலைப் பார்க்கின்ற போது எக்காரணம் கொண்டாவது எப்பாடுபட்டாவது நம் நாட்டை வடநாட்டுச் சம்பந்தத்திலிருந்து தனியாய் பிரித்துக் கொண்டால் ஒழிய நமக்கு விடுதலையோ மானமோ ஏற்படப் போவதில்லை. இன்று சிறிதாவது நமக்கு சுயமரியாதை உணர்ச்சியும் சுதந்தர உணர்ச்சியும் இருக்கிறதென்றால் அதுநமது தனிப்பட்ட தமிழ் நிலை உணர்ச்சியாலேயும் ஹிந்தி படிக்காததாலேயும் தான் என்று வலிமையாய்க் கூறுவேன். நமது ரத்தத்தில் அடிமை உணர்ச்சியைப் பாய்ச்சவே இன்று பார்ப்பன ஆதிக்கம் நம்முள் பலாத்காரமாய் ஹிந்தியைப் புகுத்துவதாகும். ஹிந்தியில் அரசியல் சுதந்தர ஞானம் கிடையாது. ஹிந்தியில் பொருளாதார ஞானம் கிடையாது. ஹிந்தியில் சமுதாய சமத்துவ ஞானம் கிடையாது. ஏதாவது இருப்பதாய்ச் சொல்லப்படுமானால் அவை இவ்வேயாகும். அதாவது:-

"ஒரு நாட்டு மக்களை ஆளவேண்டுமானால் அவர்களுக்குக் கல்வி வாசனையும் அறிவுச் சுகந்தமும் இல்லாமல் மடையர்களாக வைத்திரு"

"ஒரு நாட்டு மக்களை என்றும் அடக்கி ஆள வேண்டுமானால் அவர்களுக்குப் பொருளாதார உரிமை இல்லாமல் சாமி, பூதம், பிசாசு என்கின்றதான மூட நம்பிக்கையைப் புகுத்தி பயப்படுத்தி அவர்களது பொருள்களை கொள்ளையடி"

"ஒரு நாட்டு மக்களை அடக்கி மிருகங்களிலும் கேவலமாய் என்றென்றும் அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டுமானால் அந்நாட்டு மக்களை ஆயிரம் சமூகமாக ஆக்கி ஒன்றுக்கொன்று உடர்வுதாழ்வு கற்பித்துச் சின்னா பின்னப்படுத்திவை."

என்பதல்லாமல் வேறு என்ன இருக்கிறது? நான் சாடைக்கிய ஆசியல் தந்திரம் முதல் ஹிந்தியில் உள்ள பல ஆசிய நீதி சாஸ்திரங்களைப் பற்றியே தான் தெரிந்த வரை பேசுகிறேன். ஊரார் உழைப்பில் ஒருசிறு சமூகம் உண்டு வாழ்வதற்கு உரியதே ஹிந்தி கலைகளாகும்.

## ஹிந்தி தமிழருக்கு விஷம்.

மற்றும் பாருங்கள். நம் நாட்டில் மொத்தத்தில் இன்று 100க்கு 9 பேர்களே படித்தவர்கள். இவர்களில் பார்ப்பனர்கள் 100க்கு 3பேராய் இருந்தாலும் அவர்கள் சமூகம் பூராவும்100க்கு 100 பேர் படித்திருக்கிறார்கள். ஆங்கிலம் கற்றவர்கள் அவர்களில் 100க்கு 50பேர் இருக்கலாம். நம்மில் தமிழ் படித்தவர்களே 100க்கு 5, 6 பேர் தான் இருப்பார்கள். அதிலும் கிராம வாசிகளில் 100க்கு 2, 3 பேர்கள் தான் இருப்பார்கள். சில சமூகங்களில் ஒருவர் இருவரே இருப்பார்கள். பார்ப்பனர்களுக்கோ ஹிந்தி வெகுசுலபமான பாஷை. ஏனெனில் பாரம்பரிய பாஷை. நமக்கு அது சுலபத்தில் தழையாத பாஷை. பார்ப்பனர் 100க்கு 77 பேர் ஹிந்தியில் பாஸ் செய்தால் நம்மில் 100க்கு 15 பேர்கள் கூட பாஸ் செய்ய முடியாது. உத்தியோகத்துக்கு ஹிந்தி ஒரு யோக்கியதையாய் வைத்து விட்டால் நம்மவர்களுக்குப் பழைய படி பங்கா இழுப்பதும் பில்லைபோட்டுக் கொள்ளுவதுமான சேவக வேலைதான் கிடைக்கும். உதாரணமாக ஆசியலில் பார்ப்பனல்லாதார் இயக்கம் ஏற்படும் முன்பு சில படிப்புகளுக்கு டாக்டர் முதலிய பரீக்ஷைக்கு சம்ஸ்கிருதம் படித்திருக்க வேண்டுமென்று பார்ப்பனர்களால் சூழ்ச்சி செய்யப்பட்டு இருந்தது. அதனாலேயே பார்ப்பனரும் மலையாளிகளுமே பெரும்பான்மையாய் டாக்டர்களானார்கள். ஜஸ்டிஸ் கட்சி வந்தபிறகு பனகால் சர் காலத்தில் சமஸ்கிருதம் படித்திருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனை எடுக்கப்பட்டு விட்டது. அதற்கப்புறமே பார்ப்பனல்

லாத தமிழ் மக்கள் பலர் டாக்டர்களாக மூடிந்தது. அதுபோல் தான் ஹிந்தி உத்தியோக யோக்கியதையாகவும் வைத்து விட்டால் பழையபடி நாம் கல்வியில் இன்னும் அதிகமான பிற்பட்ட வகுப்புக்காரர்களாக ஆகிவிடுவோம். கல்வி இலாகாவில் தமிழ் எவ்வளவு கேவலமாய் மதிக்கப்படுகிறது என்று பாருங்கள். சமஸ்கிருதம் எவ்வளவு உயர்வாய் மதிக்கப்படுகிறது என்று பாருங்கள்.

## தற்கால தமிழ் நிலை.

மாகாணை கல்லூரியில் சமஸ்கிருத போதகருக்கு மீ 350 முதல் 500. தமிழ் போதகருக்கு அதில் பகுதிகூட இல்லை.

தமிழைத் தமிழ் நாட்டில் இதுவரை கட்டாய பாடமாக்க வில்லை. ஹிந்தி பிறக்கும் போதே கட்டாய பாடமாக்க பலாத் காரம் செய்யப்படுகிறது. "அதிகாரி வீட்டுகோழி முட்டை அம்மிக்கல்லை உடைக்கும்" என்று ஒருவர் சொன்னார். அது போல் ஆதிக்கத்தில் உள்ளவர்கள் பாஷை ஆனதால் ஹிந்தி தமிழை ஒழிக்க கட்டாய பாடமாக்கப் போகிறார்கள். ஒருசமயம் "10ரூபாய் கேட்டால் 5 ரூபாயாவது வராதா" என்கின்றது போல் எண்ணிக் கொண்டு தோழர் ஆச்சாரியார் கட்டாய பாட மென்றால் "இஷ்டபாடமாகவாவது வைத்துத் தொலையுங்கள்" என்று தமிழ் மண்டுகள் சொல்லாதா என்றே இந்த குயுக்தி செய் திருந்தாலும் செய்திருக்கலாம். எந்த பாடமாகவும் ஹிந்தி நமக்கு எதற்கு? அதற்கு ஆக செலவிடும் நேரம், பணம், ஊக்கம் எல் லாம் தேசிய நஷ்டமல்லவா என்று கேட்கின்றேன். இந்த நாட் டில் ஹிந்தி பாடமாக வைக்கப்பட்டால் தமிழர்கள் ஒழிந்தார்கள்— சுயமரியாதைக்கு குழிதோண்டப்பட்டது என்றுதான் அர்த்தம். ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களுக்கு இதைப்பற்றி அதிக கவலை இல்லை. அவர்களில் பலர் ராமாயணத்தை பூஜிப்பவர்கள். அதைப்பற்றி நாம் இப்போது கவலைப்படவேண்டாம். நம் தமிழ் மக்கள் இதை நன்றாய் உணரவேண்டும். அதாவது இது ஒரு நெருக்கடியான சமயம் இதில் ஏமாந்து விட்டோமேயானால் தமிழன் தாசி மகனாக தானே ஆகிவிடுவான். இப்பொழுதாவது அதற்கு என்று ஒரு ஜாதியும் ஒரு நாடும் மாத்திரமிருக்கிறது. ஹிந்தி புகுந்துவிட்டால் தமிழர்கள் பூராவும் பெண்கள் தாசிகளா கவும் ஆண்கள் தாசி மக்களாகவும் தாசர்களாகவும் ஆகிவிட வேண்டியதுதான். அந்த நிலை ஏற்பட்ட பிறகு நாம் இருப் தைவிட இறப்பதே மேல்.

## கட்சி உணர்ச்சி வேண்டாம்.

கட்சி உணர்ச்சியை இதில்விட்டு விடுங்கள். மனித சமூக சுதந்தாத்தையும் சுயமரியாதையையும் கவனியுங்கள். பார்ப்பனர்

# காதலும், சாதலும்.

(தோழர் பி. மீனாம்பாள்)

"ஏன் அவர் எழுதவில்லை? ஊரில் இருந்திருக்க மாட்டாரா? ஒருக்கால் உடம்புக்கு குணமில்லையோ?"

"காதல் பீத்து அவளுக்குக் கவிதா சக்தியையும் கூடத் தந்தது. ஆனால் இன்பத்தைத் தருமா என்பதற்கு எதிர் காலந் தான் பதில் சொல்லவேண்டும்."

'சுதந்தர இன்பம்' அவள் வேண்டுவது அதுதான்"

"நான் என் மனத்தை வஞ்சிக்கும் வகையறியேன். அந்த மூடு மந்திரமும், திரைமறைவு வேதாந்தமும் எனக்கு வேண்டாம். ஆனால்.....நிறைவேறுமா? மார்க்கமில்லை என்கிறாள் கண்ணம்மாள்."

I

தெருவை எட்டிப் பார்ப்பதும், திரும்பி கடிகாரத்தை பார்ப்பதுமாக நேரத்தைச் சபித்துக்கொண்டிருந்தாள் கண்ணம்மாள்.

---

லாத பத்திராதிபர்கள் பலர் இந்தச் சமயத்தில்தான் பார்ப்பனர்களுக்கு நல்ல பிள்ளைகளாகவும் ஹிந்தி பிரசாரம் செய்யவும் சமூக சீர்திருத்தம் என்னும் பேரால் பணம் சம்பாதிக்கவும் அலைகிறார்கள். இந்த மானங்கெட்ட மக்களை உடைய நாடு எப்படி சுதந்தரமோ சுயமரியாதையோ அடைய முடியும். இவர்களை பார்ப்பனர்கள் தேவடியாள் மக்கள் என்று ஏன் சொல்ல மாட்டார்கள்?

குறிப்பு:—

இந்த பிரசங்கத்தில் மிகுந்த முக்கியவிஷயங்கள் அடங்கி இருப்பதால் இதை நமது வாசகர்களும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் வெளியிட்டிருக்கிறோம்.

[பார்]

ஆனால் கடிகாரமோ, காலச்சக்கரமோ, கண்ணம்மாளுக்கு அஞ்சியதாகவோ, தலைய காட்டியதாகவோ தெரியவில்லை. மாறாக அவளிடம் வஞ்சம் தீர்த்துக்கொள்வதுபோல மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில் அந்தக் கடிகாரம் 10 முறை 'டிங்-டாங்' என்று ஒலித்து ஓய்ந்தது. அதே சமயத்தில் அங்கு தோன்றிய தபால்காரன் காத்தினின்றும் கண்ணம்மாளின் காதற்கிற்குப் பாய்ந்தாள் "செல்வியர் சேவகி." கண்ணம்மாளின் வதனம் மகிழ்ச்சியால் பலர்ந்தது.

மிகுந்தரிதாக "சேவகி"யின் மேல் உறையைக் கிழித்தாள். ஆர்வத்துடன் பிரித்து உள்பக்கமிருந்த "விஷயசூசிகை"யைப் படித்துக்கொண்டே வந்தாள். அவள் முகத்திலே பெருத்த ஏமாற்றம். மீண்டும் ஒரு முறை படித்தாள், ஏமாற்றம் பூரண வலுப்பெற்றது. வெறுப்புடன் பத்திரிகையை மூலையில் போட்டுவிட்டு சிந்தனா லோகத்திற்குத் தாவினாள்.

"என் அவர் எழுதவில்லை? ஊரில் இருந்திருக்கமாட்டாரா? ஒருக்கால் உடம்புக்கு குணமில்லையோ?" இவைகள் அவளுடைய மனத்தினின்றும் எழுந்த வினாக்கள். இவைகளுக்கு பதிலளிக்க அங்கு யாருமிருக்கவில்லை. ஆனால் வாசலில் விளையாடும் குழந்தைகளின் "எச்சிபிட்டேனே; அக்காவை எச்சி பிட்டேனே;" என்ற களியாட்டக்குரல் அவள் இருதயத்தை இன்னும் ஆழத்தில் அழுக்கியது. வெந்த புண்ணில் வேலிட்ட தைப்போல!

மீண்டும் எதையோ நினைத்தவளாய் பத்திரிகையை எடுத்து ஒவ்வொரு தாளாகப் புரட்டினாள். கடைசிப் பக்கத்திலே "தோழர் நடராஜன் சுற்றுப்பிரயாணம்" என்ற தலைப்பின் கீழ் பின் வண்டவாறு படித்தாள்:—

"நமது "செல்வியர் சேவகி"யின் வளர்ச்சியின் பொருட்டு, நமது உதவி ஆசிரியர் தோழர் நடராஜன் அவர்கள் சேலம், கோயமுத்தூர், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டுவிட்டார். எனவே அவருடைய கதைகளும், கட்டுரைகளும் சிலவாரங்கட்கு நமது "சேவகி"யில் வாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்."

(ப—ர்)

கண்ணம்மாளின் மனது ஒருவாறு சாந்தி பெற்றது. எனினும் "அவரு"டைய கதை இல்லாத "சேவகி"யை அவள் வெற்றுத்தாளாக மதித்தாள். அதனை மூடி வைத்துவிட்டு, கூடத்திலுள்ள ஊஞ்சல் மீது சென்றமர்ந்தாள். "நடராஜப்பத்து" என்ற புத்தகத்தை எடுத்துப் படிக்கலானாள். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலுமுள்ள "ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற தில்லைவாழ் நடராஜனே!" என்ற வாக்கியத்தை மாற்றி "அன்பனே சமதர்ம நேசனே அறிவை விளக்க வந்த தஞ்சை வாழ் நடராஜனே!" என்று மாற்றிப்பாடி மகிழ் வெய்தினாள். காதற் பித்து கண்ணம்மாளுக்குக் கவிதாசக்தியையும் கூடத்தந்தது. ஆனால் இன்பத்தைத் தருமா என்பதற்கு எதிர் காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

## II

தோழர் நடராஜன் அறிவிற்சிறந்த வாலிபன். குணக்குன்று, கல்விக்களஞ்சியம். பெண்ணுரிமையைத் தம் இன்னுயிரினும் பெரிதென மதிப்பவன். சுயமரியாதை வீரன். "செல்வியர் சேவகி"யின் மூலம் பெண்ணுலகிற்குப் பெரிதும் சேவைபுரிந்து வருகிறான். அவனது சேவையும், எழுதுந்திறமையும், கற்பனாசக்தியும், கண்ணம்மாளின் இருதயத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. அவள் அவனைக் காதலித்தாள். இது இயற்கைக்கு மாறுபட்டதல்லவெனினும் இன்றைய நிலையில் உலகம் ஒப்புமா? இதற்கு விடை மனைவி-கண்ணம்மாளுக்கு நன்றாகத் தெரியும். எனினும் அவளுடைய "காதல்" சமூகம், சட்டம், வழக்கம் போன்ற கொடிய முள் வேலிகளைத் தாண்டிக் குதித்து இன்ப லோகத்தை நோக்கித் தாவியது. "சுதந்தர இன்பம்" அவள் வேண்டுவது அதுதான்.

கண்ணம்மாள் குமாரசாமியின் மனைவி. சிறந்த கட்டழகி. நல்ல தமிழறிவு வாய்ந்தவள். இன் சொல்லும் இனிய குணங்களும் உடையவள். நாகரிக உணர்ச்சி மிக்க நல்லாள். ஏழையர்க்கிரங்கும் ஏந்திழை. அவள் எவ்வளவுக்குச் சிறந்தவளாக விளங்குகிறாளோ அவ்வளவுக்கு நேர்மாறானவன் குமாரசாமி அவளுடைய கணவன்.

கண்ணம்மாளின் தந்தை ராமநாதர் திருச்சியிலே பெரிய தனவந்தர். பிரபல வியாபாரி. அவரது ஏகப்புதல்வியே கண்ணம்மாள். அவளுக்கு 15-வது வயது நடந்துகொண்டிருக்கும்போதே ராமநாதர் இவ்வுலகினின்றும் மறைந்து விட்டார். உடன் "பங்

காளிகள்" எனப்படுவோர் எழுந்தனர், ராமநாதரின் திரண்ட சொத்துக்களைப் பங்கிட்டுக் கொண்டதுடன், உறவினரும், படிப்பற்றவரும், கிராமவாசியுமான குமாரசாமிக்கு கண்ணம்மாளை பலவந்தமாக மனைவியாக்கி விட்டனர். பெண்மையைத் தாழ்த்தினர். என்னே அநீதி! தந்தையின் சொத்தில் மகளுக்குப் பாத்தியமில்லை! அதுமட்டுமா? தனக்காக—தனது வாழ்வுக்காக ஒருவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில்கூட பெண்ணுக்குச் சுதந்தரமில்லை! ஏ! பாரத சமுதாயமே! உனது புனிதமே புனிதம்!! உனக்கு சுயராஜ்யமும் வேண்டியதுதான்!!

கண்ணம்மாள் தன் கணவன் வீடு சென்று குடித்தனம் செய்யத்தான் செய்தாள். பெயருக்குத்தான். அவளது வாழ்க்கையிலே துன்பமும், துயரமும் மலிந்து மண்டிக்கிடந்தன. அங்கு அவளுக்குக் கிடைத்த போஷணை உடலுக்குத்தான். உள்ளத்திற்கன்று. அத்துன்ப வாழ்க்கையினிடையேயும் கண்ணம்மாள் 2 குழந்தைகளுக்குத் தாயானாள். அவள் தன் கணவனைக் காதலிக்கவில்லை. மாறாக அவன் பால் இரக்கம் கொண்டாள். எனினும் "கலியாணம் செய்து கொள்வது குழந்தை பெறத்தான்" என்ற பிடிவாத நோக்கமுள்ள கணவனைச் சிறிதாவது திருப்தி செய்ய வேண்டாமா? அதன் பயனே இரண்டு குழந்தைகள்.

தன் குழந்தைகளைக்காணும் சில வேளைகளில் கண்ணம்மாள் மகிழ்ச்சியடைவாள். எனினும் அன்பும், அமைதியும் இன்றி கடனுக்காக, கட்டாயத்துக்காக வேண்டா வெறுப்புடன் பெற்றெடுத்த குழந்தைகளானதால் அநேகமாக அவைகளைக் காணுந்தோறும் "சே! மானங்கெட்ட வாழ்க்கை! இவ்வாழ்க்கையின் சின்னங்களே இச்சிற்றுருவங்கள்!" என வாய்விட்டுச் சொல்லித் துக்கிப்பாள். புழுங்குவாள்! குமுறுவாள்! கண்ணீர் சொரிவாள்! ஆமாம்! ஓர் இந்துப்பெண் தன் வாழ்க்கையில் துன்பமுற்றால் துக்கிப்பதன்றி சாந்தியடையும் மார்க்கம் கண்ணற்ற இந்து சமுதாயத்தில் வேருண்டோ? அவளுக்கு வேறு கதியில்லை. தன்னாக வாழ்க்கையைத் திருத்தியமைக்கும் மார்க்கமும் தோன்றவில்லை.

இந்நிலையிலும் கண்ணம்மாள் சிற்சில சமயங்களில் மனக் குதூகலமடைந்தாள் என்றால் அதற்கு காரணம் அவளுடைய தமிழ்ப்பற்றும் பத்திரிகை புத்தகப் படிப்புகளுமேயாகும். அதிலும் "செல்வியர் சேவகி"யில் முதலிடம் பெற்று விளங்கும் தோழர் கடராஜனின் சிறுகதைகள் பிரதானமானவை; முதன்மையானவை.

நிற்க, பத்திரிகை சம்மந்தமாகவும் நடராஜனின் சிறு கதைகள் சம்மந்தமாகவும் கண்ணம்மாளுக்கும் நடராஜனுக் கும் கடிதப் போக்கு வரத்துக்கள் நடைபெறத் தொடங்கின. பின்னும் சில நாட்களில் நடராஜன் ஏதோ அலுவலின் நிமித் தம் சேலத்திற்கு வந்தபோது கண்ணம்மாளைச் சந்திக்கும் படி நேர்ந்தது. கண்ணம்மாள் மகிழ்ச்சியால் பொங்கிப் பூரித்து விட்டாள். அவனைத் தன் கிராமத்திற்கு அழைத் துச் சென்றாள். அங்கு நடராஜன் எல்லையற்ற அன்பினால் உபசரிக்கப்பட்டான். அந்த உபசாரத்தின் உள் புறத்திலே ஒளிந்து கொண்டிருக்கும் "காதற் சுட"ரை அவனால் கண்ட றிய முடிய வில்லை. அவன் முயலவுமில்லை. அப்பாவி!

வாஸ்தவத்திலேயே ஒரு எழுத்தாளன் என்ற முறையில் தனக்குக்கிடைக்கும் உபசாரத்திற்கு அவன் மகிழ்ந்தான். கண்ணம்மாளின் பத்திரிக்கைக் காதலையும், சம நோக்கினை யும் ரசிகத் தன்மையினையும் பாராட்டினான்: ஆனால் குமார சாமி கண்ணம்மாளுக்கு ஏற்ற கணவனல்ல வென்பதை நேரில் அறிந்தபோது நடராஜன் மிகுந்த வருத்தமெய்தினான். கண் ணம்மாளின் திருப்தியற்ற வாழ்வு, அவளடையும் வேதனை நடராஜனின் இளகிய இருதயத்தைச் சுக்கு நூறாகப் பிளந் தன. அவனால் என்ன முடியும்? சேற்று நீரில் மலரும் செந் தாமரைகளில் ஒரு மொட்டு! சமுதாய விலங்கினங்களில் தோன்றிய ஒரு மனிதக்குஞ்சு!!

## III

சுற்றுப்பிரயாணம் சென்றிருந்த நடராஜன் தஞ்சை வந்து விட்டதையறிந்தாள் கண்ணம்மாள். சில வாரங்கள் சென்றன.

"நேரில் பார்க்கவேண்டும், பேசவேண்டும், பலவூர்ச்செய்தி களையும் கேட்டு மகிழவேண்டும்" என்று தன்னை மீறி எழுந்த அவாவினால், கண்ணம்மாள் நடராஜனைத் தன் கிராமத்திற்கு வந்து போகுமாறு கேட்டுக்கொண்டு எழுதினாள். அங்ஙனமே நடராஜன் வந்தான். அவளுடையவும், கணவன் குமாரசாமி யுடையவும், விருப்பத்தின்படி இரண்டு நாள் தங்கியிருந்து பின் னர் தஞ்சைக்குத் திரும்பினான்.

நடராஜன் உடனிருந்த இரண்டு நாட்களும் கண்ணம்மா ளுக்கு வெகு வெகு இனிமையாகக் கழிந்தன. பற்பல அரிய

பெரிய விஷயங்கள் பற்றிய சம்பாஷணைகள் நிகழ்ந்தன. "பொருந்தாமணமும்—இன்பத்துறவும்" என்பதுபற்றிய நடராஜனின் அபிப்பிராயங்கள் குமாரசாமியின் உள்ளத்திற் புகுந்து அவனையும் கூடச்சற்றுப் புரட்டிவிட்டன. தன் மனைவியின் பெருமையுணர்ந்தான். எனினும் "அவள் எனது அடிமை; நான் அவள் புருஷன்" என்ற எண்ணம் அவனுடைய ரத்தத் தோடு கலந்து உடம்பில் பரவிப்போயிருந்தது! கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷனல்லவா?

நடராஜன் ஊர் சென்ற அந்த க்ஷணமே கண்ணம்மாவின் பழைய இருண்ட வாழ்வு—துன்ப வாழ்வு உதயமாய்விட்டது! அவளால் சகிக்க முடியவில்லை. பலப் பல எண்ணினாள், ஏங்கினாள், அவள் உடம்பு நெருப்பாயெரிந்தது; தலை சுழன்றது, மனம் மருண்டது, "இந்து சமூகத்திலே ஒரு பெண் ணுருவோடிருப்பதைக் காட்டிலும் மண்டொழி வதே பன்மடங்கு மேல்" எனத் தீர்மானித்தாள். அவள் தீர்மானம் உரம் பெற்று வளர்ந்தது. நடராஜனின் உருவம் அவள் அகக்கண்ணில் தோன்றி மறைந்தது. அவள் முகத்திலே ஒரு விரக்தி. என்று மில்லாத சோபை!

## IV

அன்று காலை மணி 10 இருக்கும் நடராஜன் தனது ஆபீஸ் அறையில் நாற்காலி யொன்றில் வீற்றிருந்தான். தபால்காரன் அன்று வந்த தபால்களைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அவைகளில் ஒரு கவரின் மேலிருந்த எழுத்துக்கள் அவன் மனதை ஈர்த்தன. ஆம்! அது கண்ணம்மாளின் எழுத்தென்பதில் சந்தேகமில்லை. ஆர்வத்துடன் கவரை உடைத்துக் கடிதத்தைப் படித்தான் நடராஜன்.

அன்பரே!

தங்களுடைய கல்வித் திறனுக்கும், கற்பனா சக்திக்கும், பல் கோடி வணக்கம்! நாம் நேரில் பல பேசியிருப்பினும், எனது கடைசிக் கடிதமாகிய இத்தாளில் என் மனதைத் திறந்து சொல்லுகிறேன். தங்களுடைய உணர்ச்சியூட்டும் சிறு கதைகளும், அரிய கட்டுரைகளும், எனது இருளடைந்த அகக்கண்ணைத் திறக்கச்செய்தன. பகுத்தறிவைப் புகட்டின. அதன் பயனாக என் இருளடர்ந்த வாழ் நாட்களிலும், சில சமயங்களில், சிறிது ஒளியும், மன வமைதியும், சாந்தியும் பெற்றேன். தங்களுடைய இந்தப் பேருபகாரத்திற்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்!

*"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது"*

என்பது வாயனாரின் அமுத வாக்கன்றோ? ஆனாலும் எனது கொடிய துன்ப வாழ்வை மாற்றும் வகை தெரிக்திலேன். இந்த ஈன வாழ்க்கையை நான் முற்றிலும் வெறுக்கிறேன். நான் ஓர் ஆணாய்ப் பிறந்திருந்தால் ஆஹா! எவ்வளவு கன்றாய் இருந்திருக்கும். அப்பொழுது தங்களை ஒரு கணமும் விட்டுப் பிரியேனே, உடனிருந்து தங்கள் உழைப்பில், சேவையில், பங்கெடுத்துக்கொள்ளும் பாக்கியம் பெற்றிருப்பேனே, அந்தோ! என் ஜென்மம் பாழ்!

நான் ஒரு பெண். புராணப்பாஷையில் பெண் பேய்! ஒரு பெண்ணும், ஓர் ஆணும் தூய நட்புக் கொண்டிருப்பதை இக் கொடிய உலகம்,—காதலுக்கும் காமத்துக்கும் ஓரே இலக்கியம் கற்பிக்கும் கண்மூடி உலகம்—போற்ற வேண்டியதைத் தூற்றுவதும், தூற்றவேண்டியதைப் போற்றுவதுமான தீய உலகம்—ஆணுக்கு ஒரு சட்டமும் பெண்ணுக்கு ஓர் சட்டமும் பேணி வைத்துள்ள பித்தலாட்ட உலகம், சம்மதிக்குமா? சம்மதிக்காவிடினும் இடையூறு விளைவிக்காமலாவது வாளா கிடக்குமா?

அன்ப! மனமொழி மெய்களால் நான் தங்களை காதலிக்கிறேன். இதைச் சொல்ல வெட்கப்படவில்லை. நான் என் மனத்தை வஞ்சிக்கும் வகையறியேன்! அந்த மூடு மந்திரமும், திரைமறைவு வேதாந்தமும் எனக்கு வேண்டாம். ஆனால் எனது எண்ணம்—காதல் நிறைவேறுமா? யோசித்தேன், தாங்கள் என் மனதிற் புகுந்த நாள் முதல் இன்று வரை இரவு பகலாக யோசித்தேன்! மார்க்கமில்லை. சட்டம், சமூகம், வழக்கம், பழி, பாவம் முதலிய பூதங்கள் என்னை விழுங்க வாயைத் திறக்கின்றன. காரணம் நான் ஒருவனுடைய மனைவி! எனக்கு எவ்விதச் சுதந்திரமுமில்லை. வெறும் பொம்மை!

அந்தோ! நினைக்க நினைக்க மனம் வேகிறது. "தாதர் என்ற நிலைமைமாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வு மிக்க காட்டிலே" என்பது எட்டளவில் தான் செய்கையில் இல்லை. இந்த நூற்றாண்டில் அந்தச் சுதந்தரம் வரப்போவதுமில்லை. எல்லாம் கனவு! வீண் ஆசை.

அன்பரே! "எனது காதல் நிறைவேறாது" என்பது தெரிந்திருந்தும் ஆவி சோர்ந்து உளம் நைந்து சிறிது சிறிதாக

# கிண்டல்.

(தாலி மகத்துவம்.)

ராமன்:—"தாலி" என்றால் என்ன?

கிருஷ்ணன்:—அது ஒரு விளம்பரப் பலகை!

ராமன்:—அதை ஏன் பெண்கள் கழுத்தில் கட்ட வேண்டும்?

கிருஷ்ணன்:—அடஅப்பாவி! நாய் வளர்ப்பவர்கள் அதன் கழுத்தில் ஒரு "பாஸ்" கட்டுகிறார்களே அது ஏன் தெரியுமா?

ராமன்:—முனிசிபாலிட்டியார் அதனை அடிக்காமலிருப்பதற்காக.

கிருஷ்ணன்:—அது போலத்தான் தாலியும் பெண்களுக்கு உதவுகிறது. தாலி ஒரு விளம்பரப் பலகை. அது பறை சாற்றுவதென்ன வென்றால் "இந்தப் பெண் மாடு ஒருவனுக்கு விற்கப்பட்டு விட்டது. எனவே இம்மாட்டை வேறு ஒருவரும் விரும்பி விடாதீர்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை!!"

பி. எம். அம்பாள்.

---

உடல் கரைந்து மடிவதைக் காட்டிலும் ஓரேயடியாக இறப்பதன் மூலம் சுகம் பெறத் துணிந்து விட்டேன். மன்னியுங்கள். இக்கடிதம் தங்கள் கரம் சேருமுன்பே எனது சவம் எங்கள் ஊர்க்கிணற்றிலே மிதக்கும்.

"செல்வியர் சேவகி" தழைத்து தங்கள் உயரிய வாழ்வும், சமூக சேவையும் நீடிக்க விழைகின்றேன்.

தங்களை என்றும் மறவாத கண்ணம்மாள்.

கடராஜனுடைய மார்பின் மீது சம்மட்டியால் அடிப்பதைப் போன்றிருந்தது. அவன் தலை கிரு கிருத்தது. அவனுக்கு இவ்வுலகமே தானுள்பட, தனது ஆபீஸ் அறை, பெஞ்சு, நாற்காலி, மேஜை யாவும் சூனியமாகத் தோற்றியது. அவனது கண்களினின்றும் புறப்பட்ட நீரருவி கையிலிருந்த கடிதத்தை நனைத்து விட்டன! அவனுடைய வாயில் "காதல்" "காதல்" என்ற வார்த்தை மெலிந்து, நலிந்துப் போய் உருக்குலைந்து உலவிக்கொண்டிருந்தது!

---

# மகளை மணந்த தந்தை.

## விவாக ரத்துக்கு வழக்கு.

ரிவர்ஸைட் கண்ட்ரீ பிரதம கோர்டில், மர்ஜோரி மாக் டொனால்டு என்ற 19 வயதுள்ள அமெரிக்கப்பெண் ஆன்ஸ்ட் ரூதர் மாக்டொனால்டு என்பவரிடமிருந்து தனக்கு விவாக ரத்து வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்திருக்கிறாள். ஆன்ஸ்ட்ரூதர் தன் தந்தையென்றும் தன்னைக் கற்பழித்துக் கல்யாணம் செய்து தங்களுக்கு ஒரு குழந்தை பிறந்திருப்ப தாகவும் தன்னை தற்சமயம் தன் தந்தையான கணவன் அதி கக் கொடுமையாக நடத்துவதால் தனக்கு விவாக ரத்து அளிக்க வேண்டுமென்று பின் வருமாறு மனுச்செய்திருக் கிறாள்.

"நான் 3 வயதுக் குழந்தையாய் இருக்கும்போது என் தாயும் தந்தையும் விவாகரத்து செய்து கொள்ள என் தாய் மற்றொருவரை மணந்து கொண்டாள். 12 வயதாகும் வரை யில் என் சொந்தத் தந்தையைப் பார்க்கவில்லை. தாயுடனே இருந்து வந்தேன். பின்பு அவர் இருப்பிடம் தெரிந்து கொண் டேன். ஆனால் எனக்கு 14 வயது ஆனபோது என் தாய் இறக்க மாற்றாந்தந்தை வேறொருத்தியை மணந்து கொண்டு என்னைத் தனியே விட்டுச் சென்றார்.

"பிறகு நான் என் சொந்தத் தந்தையிடம் போய்ச் சேர்ந் தேன். சேர்ந்த ஒரு வருஷத்திற்குள் அவர் என்னைக் கற் பழித்துவிட்டார். அடிக்கடி எங்களுக்குள் நேசமும் சண் டையுமா யிருந்து வந்தது. ஒரு முறை என்னைக் கற்பழித்த தாகக் குற்றம் சாட்டிப் போலீசில் தெரிவிக்க அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொள்ள 11 மாதக் காவல் தண்டனை விதிக்கப்பட்டார். அவர் சிறையிலிருக்கும்போது நான் அடிக்கடி கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தேன். அவர் விடு தலை அடைந்ததும் இருவருமாக இண்டியோ என்ற இடம் சென்று மறுபடியும் புருஷனும் மனைவியுமாக வாழ்ந்து வந்

# நாஸ்திகம்.

(ஈ. வெ. ரா.)

---

உலகத்திலேயே காஸ்திகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அநேகமாய் பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக் கூடியதாக இருந்துவருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால் அவ்வார்த்தையில் கடவுள் என்பது இல்லை என்கின்ற பொருள் அடங்கியிருப்பதாகக் கொள்வதே யாகும். மக்கள் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும், வெறுப்புக் கொள்ளவும், புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் கற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர கடவுள் என்பதைப்பற்றிய விளக்கம் யாவருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு அது (கடவுள் என்பது) மனத்திற்கும், புத்திக்கும் எட்டாதது என்பதாகவும், அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தானாக வேண்டும் என்றும் நிர்பந்தப்படுத்தப் பட்டுவிட்டது. இப்படி இருந்த போதிலும் என்றையத் தினம் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்று முதலே கடவுள் இல்லை என்கின்ற வாதமும் ஏற்பட்டு வெகுகாலமாகவே இவ்வாதப் பிரதிவாதம்

---

தோம். ஆனால் இது வரை நாங்கள் கல்யாணம் செய்து கொள்ளவில்லை. அங்கு அவர் ஒரு மின்சார போர்மெனாக இருந்து வந்தார்.

"அரிஸ் என்ற விடத்திலுள்ள போனிக்ஸ் சென்று 1936-ம் வருஷக் கிறிஸ்துமசுக்குப் பின் அங்கு நாங்கள் கல்யாணம் செய்துகொண்டோம். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் எங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் சென்ற ஏப்ரலில் மறுபடியும் எங்களுக்குள் சண்டை ஏற்பட நான் ஜில்லா வக்கீலிடம் விஷயமறிவித்து வழக்குத் தொடுத்தேன்."

---

கடந்து வருவதோடு காலதுவரை முடிவுபெற முடியாமலே இருந்து வருகின்றது.

கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும் கூட உலகில் உள்ளன. உதாரணமாக சூனியமதம், நிரீஸ்வர மதம், உலகாயுத மதம், (Materialism) நாஸ்திக மதம் என்பன போன்ற பல உண்டு என்றாலும் கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்கின்ற ஒருகிளர்ச்சி வலுத்து அதை அழுலுக்குக் கொண்டுவந்து மற்றும் உலகமெங்கும் அக் கொள்கையைப் பரப்ப பிரசாரமும் செய்ய ஏற்பாடுகள் சாதாரணமாக இந்த இருபதாவது நூற்றாண்டில் தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிந்து வருகின்றதென்பதாகவும் தெரியவருகின்றது.

ஏனெனில் இதுவரையில் உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக் கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும், கடவுள் பிரசாரத்தின் போால் கௌரவமும், வயிற்றுப்பிழைப்பும் நடத்தி வந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும், மதத்துடனும், கடவுளுடனும் பிணைக்கப்பட்டே இருந்ததாலும், கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்திற்கோ, கூட்டத்திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு அவர்கள் மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு அந்த அபிப்பிராயம் வலுக்க முடியாமலும, பரவமுடியாமலும் போய்விட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும், அதிருப்தியும் தரக்கூடியதாயிருந்தாலும் மற்றும் கடவுள் போால் அல்லது கடவுள் சம்மந்தமான மோக்ஷம், சாஸ்திரம், கதை, புராணம், பிரசாரம் ஆகியவைகளின் போால் வாழ்வை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத்திரத்தைக்கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் நடு நிலையுள்ள அறிஞர்களால் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யத்தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும் அவ்வித அபிப்பிராயக்காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும், ஞானவான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்துவருகின்றன. மேல் நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப்படுபவர்களுக்குள் இன்றும் அநேகர்கள் நாஸ்திகர்களாகத்தான் இருந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ருஷியா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கடவுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும் நாஸ்திகத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள்

ஏற்படுத்தப்பட்டு அவற்றிற்காக பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்கள் முதலிய வைகள் செய்யப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் ''நாஸ்திகத்தை உலகமெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்'' என்னும் பெயரால் ஒரு ஸ்தாபனத்தை ஏற்பாடு செய்து அதன் மூலம் 3, 4 வருஷங்களாக நல்லவேலைகள் மும்முரமாய் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையுன்படி அச்சங்கமானது பிரசாரத்திற்காகவும் துண்டுப்பிரசுர வினியோகத்திற்காகவும் வருஷம் ஒன்றுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கு மேலாகவே செலவு செய்து வந்திருக்கின்றது. ''கிறிஸ்துமதம் வெடிப்புக்கண்டுவிட்டது'' என்கின்ற போராலும் ''மதம் என்றால் என்ன?'' ''கடவுள் என்றால் என்ன?'' ''கடவுள் இல்லாத முற்போக்கு'' ஆகிய இவைபோன்ற தலைப்புகளால் பல லக்ஷக் கணக்கான துண்டுப்பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப் பட்டிருப்பதாகக் காணப்படுகின்றது. சங்க அங்கத்தினர்கள் வருஷத்திற்கு வருஷம் 100-க்கு 50 வீதம் உயர்ந்துக் கொண்டு வருவதுடன் பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலுங்கூட பிரசாரங்கள் செய்யப்பட்டு வருவதாய்க் காணப்படுகிறது. வேறு பாஷைகள் மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு அட்களை அனுப்பி இது போன்ற பிரசாரமும் துண்டுப்பிரசுரங்களும் நடைபெற்று வந்திருப்பதாகவும் காணப்படுவதோடு ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக்கொண்டு திருப்தி தரத்தக்க அளவு பிரசாரம் செய்திருப்பதாயும் காணப்படுகின்றது. இதன் தலைமைக் காரியாலயம் அமெரிக்காவிலுள்ள, நியூயார்க் பட்டணத்தில் 14-வது வீதி, 307:E நெம்பர் கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. இதில் சேர விரும்பும் அங்கத்தினர்க்கு வருட சந்தா ஒரு டாலர் அல்லது மூன்று ரூபாயாகும் என்பதாகவும் காணப்படுகிறது.

இம்படியே லண்டன் பட்டணத்தில் சில ஸ்தாபனங்கள் அதாவது ''தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்'' என்றும் ''அறிவாளிகள் சங்கம்'' என்றும் ''உண்மை நாடுவோர்கள் சங்கம் என்றும்'' பலசங்கங்கள் ஏற்படுத்தி அதுபோலவே பிரசாரமும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சிலவற்றின் வயது 40, 50க்கு மேல் ஆயிருந்தபோதிலும் அவை

கள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும், செல்வாக்காயும் கடைபெற்று வருகின்றதாக அறிவிக்கப்படுகின்றன.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலே மிக்க அறிவாளிகள், ராஜதந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியார்களே அதிகமாயிருக்கின்றார்கள். ஆகவே நாஸ்திகப் பிரசாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக்காகவும் கடைபெறுகின்றன என்பதைத் தெரிவிக்கவே இவற்றை மேற்கோள்களாகக் குறிப்பிட்டோம்.

இனி அதனால் ஏற்படும் கெடுதிஎன்ன? நன்மைஎன்ன? என்பவைகளைப்பற்றி யோசிப்போம். சாதாரணமாக மனிதன் நாஸ்திகனாயிருருந்தால் அதாவது கடவுள் நம்பிக்கை இல்லாதவனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி கடக்க மாட்டான் என்றும், திருடு, பொய், மோசம், சூது ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறிக்கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்களைச் செய்யப் பயப்படமாட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றி கணிக்குமுன்பு, உண்மையான கருத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கை உள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கின்றானா? என்பதை முதலில் யோசிப்போம்.

சாதாரணமாக, கடவுள் என்கின்ற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர்கள் கருதிக்கொண்டிருக்கும் கருத்து என்னவெனில் சர்வ சக்தியும்-அதாவது உலகம், உலகத்திலுள்ள ஜீவராசிகள் புல், பூண்டு, தாவரங்கள் முதலியயாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு தனது சக்தியால் இயங்கச் செய்யப்படுகின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதானதும், சர்வ ஜீவராசிகளையும் ரக்ஷிக்கும் தன்மையுடையதானதும், எல்லாவற்றையும் சமமாய்ப்பார்ப்பதானதும், சுருக்கமாமாய்ச் சொல்வதனால் அவனன்றி (அக்கடவுள் சித்தம் அன்றி) ஒரு அணுவும் அசையாததான சக்தியுடையதானது என்பதாகக் கருதிக்கொண்டிருக்கிறார்கள். இக் கருத்து சரியா, தப்பா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி ஒரு வஸ்து இருக்கின்றதா இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக்கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா? தீமையா? என்று முடிவு செய்வதற்கு முன்னும், இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மையில் நம்பி இருக்கின்றானா? அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி

ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா? அதாவது எந்த மனிதனுடைய நடவடிக்கையில் இருந்தாவது மேற்கண்ட சக்தியும், குணமும் கொண்ட ஒரு வஸ்துவை நம்பி நடக்கின்ற மனிதனின்நடவடிக்கைகள் இவை யென்று கருதும்படியாக இருக்கின்றனவா? என்பதை யோசிப் போமானால் இதுவரை ஒரு மனிதனையாவது அம்மாதிரி நம்பிக்கையின்மீது நடக்கின்றான் என்பதாகக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், அத்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன்கூட தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றும்தான் சொல்லவேண்டி இருக்கிறதே தவிர வேறில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். அதாவது அப்படிச் சொல்லுவதானது சாதாரண மக்களிடையே யாத்திரமல்லாமல் கடவுள் பிரசாரம் செய்பவர்களிலாவது, கடவுளைக் கண்டவர்களாக சொல்லப்பட்டவர்களிலாவது, கடவுளுக்குச் சமமாகக்கருதும் சமயாச்சாரிகள் மதத்தைக்காப்பாற்றும் ஸ்தாபனத்தலைவர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது, காஸ்திஜத்தைக்கண்டு பயந்து கடு நடுங்கித் துயரடைப்பட்டு கண்ணீர் வடிக்கும் ஆஸ்திகப் பண்டிதர்கள், சாஸ்திரிகள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது மற்றும் மகாத்மாக்கள், வேதாந்திகள், பெரியோர்கள் முதலியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனி மனிதனென்றும், தனக்காக தான் செய்யவேண்டிய காரியம் பல உண்டு என்றும் அவற்றை தினமும் செய்வதாகவும், அவனவன் இஷ்டப் பட்டபடி செய்து கொண்டும், அதனதன் பலனை அடைந்து கொண்டும் அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டும் மற்றவர்கள் செய்வதில் குணதோஷம் கற்பித்துச் சொல்லிக்கொண்டும், அதற்காக விருப்பு வெறுப்புக் காட்டிக்கொண்டும் இன்பதுன்ப தூக்கமடைந்து கொண்டுதான் இருக்கின்றானே ஒழிய, கடவுளின் சர்வசக்தியைப்பற்றியோ, சர்வ வியாபகத்தைப்பற்றியோ, சர்வ தயாபரத்தைப்பற்றியோ சர்வ சமத்துவத்தைப் பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும்இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பி இருக்கவில்லை என்றுதான் முடிவு கட்டவேண்டியிருக்கின்றதென்பது ஒருபக்கமிருந்தாலும், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச்

செய்வதினாலாகிலும், காரியத்தில் ஏதாவது-அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக்கூடும் என்று கருதுகின்ற, முன் சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா? என்று பார்த்தால் திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக்காதவன், முறைதவறிக்கலவி செய்யாதவன், பிறருக்கு இம்சை கொடுக்காதவன் முதலான காரியங்கள் செய்யாதவன் என்பவன் ஒருவனைக்கூடக் காண முடிவதில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது. அன்றியும் திருடு, வஞ்சகம், பொய், முறை தவறிக்கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமாயிருக்கின்றது என்றாலும் மக்கள் எதை எதை மேற்கண்ட மாதிரி குணங்கள் எனக் கருதுகின்றார்களோ. அதைச் செய்யாமல் இருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையும் உண்டாகுவதாலோ, நிலை நிறுத்துவதாலோ முடிகின்றதா? என்பதுதான் இங்கு யோஜிக்கத்தக்கதாகும்.

இது ஒருபுறமிருக்க, மேல்கண்ட-அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது, அந்தப்படி கருதிக் கொண்டிருக்கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்றவர்களிடத்திலாவது, முன் சொல்லப்பட்ட திருடு, பொய், வஞ்சகம், பிறரை இம்சிப்பது முதலிய குணங்கள், கடவுள் நம்பிக்கைக்காரர்களைவிட (ஆஸ்திகர்களைவிட) அதிகமாய் இருப்பதாகவாவது அல்லது பிறமக்களுக்கு ஆஸ்திகர்களைப் போன்ற நம்மை செய்யவில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால் அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில், மேற்கண்டபடிதமான காரியங்களைப்பற்றி யெல்லாம் யோசனை செய்து பார்ப்பதை விட்டு விட்டு, தனக்கே புரியாத படி ஒன்றை நினைத்துக்கொண்டு "கடவுள் உண்டா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றாயா இல்லையா"
என்று கேட்பதும்,

"கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் என் வித்தியாசமாயிருக்க வேண்டும்?"

"ஒருவர், பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் ஏன் இருக்க வேண்டும்?"

"ஒருவன், கூன், குருடு, கொண்டை, குஷ்டரோகி முதலிய வனாயும் ஒருவன் நல்ல திடசரீரியாகவும் ஏன் இருக்க வேண்டும்?"

"ஒருவனுக்கு என் பத்துப்பிள்ளை, ஒருவனுக்கு ஏன் நாலு பிள்ளை, ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?" என்றும்,

"இருவர் ஒரே காலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் நஷ்டமும், ஒருவர் லாபமும் ஏன் அடைய வேண்டும்?" என்பது போன்ற கேள்விகளைக்கேட்டு அதன் மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டு என்று மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி கேள்விக்காரர்களை பகுத்தறிவு இல்லாதவர்கள், ஆராய்ச்சி சக்தி இல்லாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இப்படிப்பட்ட கேள்வி கேட்பவர்களை ஒரே ஒரு பதிலில் வாயடைக்கவேண்டுமானால், "இம்மாதிரியாகத்தோற்றங்களில் ஒன்றுக்கொன்று விந்தியாசங்கள் காணப்படுவதாலேயே (மேற்கண்ட குணமுடைய) கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில் சர்வ சக்தியுடைய கடவுள் ஒருவர் இருந்து, சர்வத்திலும் புகுந்து சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால், சர்வத்தையும் ஒன்று போலவே சிருஷ்டித்திருக்கலாமன்றோ? வேறு வேறாகக்காணப்படுவதாலேயே சர்வ சக்தியும் சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்பதுதான் பதிலாகும்.

ஏனெனில் கொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும், கஷ்டப்படுத்துகிறவனுக்கும்

"கடவுளே" காரணஸ்தனாயிருந்தால் கடவுளை சர்வ தயா பரத்துவ முடையவனென்றும், பாரபக்ஷமில்லாத சர்வ சமத் துவ குணமுடையவனென்றும், எப்படிச் சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக்கொண்டு சொல்லக்கூடிய சமாதா னங்கள் ஒரு புறமிருக்க ஆராய்ச்சியைக்கொண்டு அறியக் கூடிய சமாதானங்களைப்பற்றி சற்று கவனிப்போம். ஓரே கையால் கைகிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய் வைத்து ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனி யாய் எண்ணிப்பார்த்தால் அவற்றுள் ஒன்றுக்கொன்று எண் ணிக்கை வித்தியாசமிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளின வைகள் ஏன் வித்தியாசப்படுகின்றது? ஓரே பூமியில் ஓரே வினாடியில் விதைக்கும் ஒரே மாதிரி விதைகள் சில முளைத் தும் சில முளைக்காமலும் முளைத்தவைகளில் சில வளரா மல் கூளையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிகமான மணிகள் கொண்ட கதிராகவும், சில குறைவான மணிகள் (தானியங்கள்) கொண்ட கதிராகவும் சில முளைத்து நன் றாய்த் தளைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராக வும் இருக்கக் காரணம் என்ன? ஒரு வினாடியில் ஒரு பூமியில் நட்ட செடிகள் ஒன்று பல இலைகளுடனும் ஒன்று சுவல் பகிளைகளுடனும் வளருவதும் ஒன்று பதினாயிரக்கணக் காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக்கணக்காகக் காய்ப்பதும், ஒன்று பூ விட்டு எல்லாம் கருகி உதிர்ந்து விடுவதும், ஒன்று பூ விடாமலும் பிஞ்சு விடாமலும் வரடாயிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அத னதன் இனத்தில் என் ஒன்றுபோல் இருக்கக்கூடாது?

ஒரு சமயம் கடவுளே இந்தப்படி செய்திருப்பார் என்று சொல்வதானால் அம்மரம், செடி, தானியம் முதலியவைகள் இப்படி பலன் அடைவதற்கு காரணம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு என்ன சமாதானமோ அதுதான் மனிதர்கள் சம்மந்தமான கேள்விகளுக்கும் சமாதானம் என் பது தானாகவே புலப்படும்.

---

# முகவுரை.

(ஆர். டி. கார்வ்)

—)0(—

மதத்திற்கும் விஞ்ஞானத்திற்குமுள்ள பிரதான விரோதம் மதம் நம்பிக்கையின்மேல் கட்டப்பட்டிருக்கிறது. விஞ்ஞானமோ காலதிகத்தின்மீது கட்டப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்ட விஞ்ஞான விதிகள் கோட்பாடுகள் சித்தாந்தமானவைகளல்ல. இப்பொழுதுள்ள விதிகளைவிட விளக்கமாகவும், தெளிவாகவும் வேறு விதிகள் விளக்கப்படுமேயானால் ஒரு உண்மையான விஞ்ஞான வாதி அவைகளுக்கு இணங்கியே திருவான். அல்லது ஒரு புதிய கோட்பாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு அவைகள் இயற்கனவே ஒத்துக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு முரணாயிருந்தால் மேலும் விரிவான கோட்பாடுகளை ஆராய முயலப்படும். ஆகவே பிரத்தியகஷ ஆராய்ச்சிக்கு ஒவ்வாத விஷயத்தை காலாவட்டத்திலே மாற்றியமைத்துக் கொள்ளுவான்.

எந்த விதமான நம்பிக்கை எல்லாவிதமான மதக்காரர்களாலும் நம்பும்படியாகச்செய்திருக்கிறது என்றால்உன்னால் எதை உண்மையிலே இருப்பதாகவோ அல்லது அதைப்பற்றிய விபரமோ அறியமுடியாத சமயத்தில் குருட்டுத்தனமாக வைக்கப்படுகிற நம்பிக்கையே மதமாகும். எதைப்பற்றியாவது உனக்கு பூரண அறிவிருந்தால் அல்லது அறிந்திருந்தால் உதாரணமாக இரண்டும் இரண்டும் நான்கு என்பது போல் அதை நம்பவேண்டிய அவசியமேயிராது.

அப்படி நம்புவதாயிருந்தால், ஒரு விஷயம் உண்மையல்ல என்று திண்ணமாகத் தெரிந்தும் நீ நம்புவதாகவும் அல்லது அதைப்பற்றி சந்தேகங் கொண்டிருந்தும் நம்புவதாகவே கொள்ளவேண்டும்.

எந்த முறையைப் பார்த்தால் உனது நம்பிக்கைக்கு ஆதாரமில்லை. சந்தேகம் விபரீதமாக முடிந்துவிடுமென்றும் பல விதமான கேள்விகளுக்கு இடங்கொடுத்து நான்கள் ஒரு

காலத்தில் மெய்யானதென்றும் சத்தியமானதென்றும் பறை சாற்றி வந்த (மத) கோட்பாடுகளுக்கு மக்கள் உலைவைத்து விடுவார்கள் என்பதையறிந்தே மத கர்த்தாக்கள் நம்பிக்கையை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களுடைய கோட்பாடுகளின் தத்துவத்திற்கே முரணான ஆதாரங்கள் காட்டினாலும் அல்லது அவர்களுடைய கோட்பாடுகளுக்கே சரியான ஆதாரங்களைக் காட்ட முடியாதுபோனாலும் தங்களுடைய கொள்கையை நம்பிக்கையிலே காட்டி வைத்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கைதான் இன்று உலகிலே காணக்கூடிய எண்ணற்ற குருட்டு நம்பிக்கைகளுக்கும் ஞானபோதனைகளுக்கும், கிறிஸ்தவ கைதன்சுகளுக்கும் ஆத்ம விசாரணைகளுக்கும் தோன்றலாயின.

எல்லாவற்றையும் விஞ்ஞானம் விளக்கிவிட முடியும் என்று கூறுவதற்கில்லை. இதனால் விளக்கப்பட முடியாத சில விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மத போதகர்கள்—மத பிரச்சாரகர்கள்—மதத் தரகர்கள் தங்களுடைய மூடப் பழக்க வழக்கங்களை நிலை நாட்ட முன் வந்து விடுகிறார்கள்.

உண்மையாகப் பேசவேண்டுமானால், ஒரு யோக்கியமான—நாணயமான விஞ்ஞானவாதி ஒரு சாதுரியமான மோசக்காரன்-வஞ்சகனை வெற்றி கொள்ளமுடியாது. இது போலவேதான் இந்த மதக்காரர்களுடைய வாதமுமிருக்கிறது. நேர்மையாக—பிரத்தியட்சரூபமாக நிரூபித்துக் காட்டமுடியாது. சூழ்ச்சியினாலும் தந்திரங்களாலுமே வெற்றியடைய முயல்கின்றார்கள்.

உதாரணமாக, மறைவான ஒரு வஸ்துவோ அல்லது இயற்கைக்கு புறம்பான—மேலான—உட்படாத ஒரு வஸ்துவோ விஞ்ஞானத்திலே காணப்படவில்லை.

இயற்கைக்கு மாறான அறிவுக்கு எட்டாத சம்பவத்தை அதிசயத்தைக் கண்டால் உடனே ஒரு விஞ்ஞான வாதி பழைய சம்பவங்களோடு ஒத்திட்டுப்பார்க்க முயல்கின்றான்.

ஒரு விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்போது ஏதாவது ஒரு முட்டுக்கட்டை அறிவுக்கு எட்டாதது குறிக்கிட்டால் உடனே முட்டுக்கட்டையை தகர்த்தெறிய முயலுவான். அதற்குப் பதிலாக அந்த விஞ்ஞான வாதி மத பித்தர்களைப் போன்ற நம்பிக்கையிலே நம்பிக்கையுடைய வனாயிருந்தால்

அவனது ஆராய்ச்சி பாழே. அவன் எவ்வளவு பெரிய விஞ்ஞானியானாலும் சரியே அவனால் அக்கலைக்கு ஒரு ஊசியளவுகூட பயனுண்டாகாது.

எந்த விதமான-சங்கடமான ஏதாவது மனிதனது வாழ்க்கையிலே குறுக்கிட்டு விட்டால் உடனே அவைகள் ஏதோ ஒரு தேவதை-கடவுள் அருளியால் கற்பிக்கப்பட்டது என்று கற்பனை கட்டிவிடுகிறார்கள்.

விஞ்ஞானிகள் எவ்வளவோ சமயங்களில் ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு சிறு உதாரணத்தைக் கீழே தருகிறேன்:

மார்கர்ட் பாக்ஸ்ம், அவளுடைய சகோதரியும் செய்து வந்த அற்ப வித்தை அநேக காலம் வரை ஏமாற்றி வந்தது. இவர்கள் ஒருவிதமான சப்தத்தை உண்டு பண்ணி வந்தார்கள். அந்த சப்தத்தை எவ்வாறு உண்டு பண்ணி வருகிறார்கள் என்பது அநேக விஞ்ஞானிகளுக்கு வியப்பையளித்து வந்தது. அவர்கள் உண்டுபண்ணும் சப்தத்தை வெகுநாள் வரை உற்று கவனித்த பிறகு அவர்கள் கால் விரல்களால் சுடக்கு விடுகிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. 1888-ம் வருஷத்தில் அவளே பல வருடங்களாக பொது மக்களை ஏமாற்றி வந்ததாக ஒப்புக்கொண்டாள்.

இதே மார்கர்ட் பாக்ஸைப்பற்றி சர். வில்லியம் குருங்ஸ் எழுதிருப்தாவது:—

"ஓசைகளின் அசைவைப்பற்றி விளக்குவதற்கு அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட சகல விதிகளையும்—தியாகிகளையும் கொண்டு இந்தப் பெண்களின் சப்தத்தைக் கண்டுபிடிக்க என்னால் ஆனவரை முயன்றேன். கடைசியாக இந்த சப்தம் எந்தவிதமான தந்திரத்தாலோ அல்லது வேறு கருவிகளின் உதவியாலோ செய்யப்படுவதில்லை யென்றும் வெளியுலக சக்தியாலேதான் செய்யப்படுகிறது என நினைப்பதைத் தவிர வேறொன்றுமில்லை யென்றும் முடிவு செய்தேன்."

இவ்வளவு ஆராய்ச்சிகள் வெளித்தோன்றி சந்தேகங்கள் விளக்கப்பட்டிருந்தும் சிலர் தங்களுடைய அறிவுக்கு எட்டாத சில விஷயங்களைக் குறித்து சரியான ஆராய்ச்சி செய்யாமல் இத்தகைய முடிவுகள் செய்துவிடுகிறார்கள் என்றால் இவர்களது அறிவைக் குறித்து சிரிப்பதா அழுவதா என்பது தெரியவில்லை

விஞ்ஞானிகளை ஏமாற்றி வந்த விஷயங்களை நிரூபித்துக்காட்ட வேறொரு உதாரணத்தை விளக்க கீழே ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன்.

தோழர் சிக்கனோரா, ஈசோபியா, பல்லாடினோ, இத்தகைய விஷயங்களை விஞ்ஞானப் பூர்வமாக விளக்குவதற்காக சேரித்துக் கொண்டு வரும்படியாகப் புறப்பட்டனர்.

பாதியிருண்ட ஓர் அறையில் மேஜைகளும் சில வஸ்துக்களும் நகர்வதுபோல செய்து பொதுமக்களை ஏய்த்து வரப்பட்டது. இதன் ரகசியத்தை அறிய தோழர் சிக்னோரா மிகக் கவலையுடனிருந்தார். இவர் இவ்வாறாக உற்றுக் கவனித்து வருகையில் 1910-ல் நியூயார்க் நகரத்திலே ஒரு அரையிருட்டறையில் இக்காரியம் துவக்குவதற்கு முன் கருப்புடைதரித்த இருவர்கள் இவருக்குத் தெரியாமல் அரைக்குள் நுழைந்து மேஜைக்கடியிலிருந்து கொண்டு மேஜையையும் மற்ற வஸ்துக்களையும் நகர்த்திக்கொண்டு வந்ததைக் கண்டார்.

இது போலவே எத்தனையோ சாதனங்கள் தந்திரங்களால் சாதிக்கப்பட்டு வந்திருக்கின்றன என்பதை பன் முறை விளக்கப்பட்டிருந்தும் இந்தப் பித்தலாட்டம்—புரட்டு குறைந்தபாடில்லை. ஏனெனில் புறம்பான சக்தியொன்றிருப்பதாக நம்பி வருவதால் ஏதாவது சிறிது கஷ்டமான காரியம் புரியாத காரியம் தோன்றிவிட்டால் உடனே ஏதாவது கற்பனை கட்டிவிடுகிறார்கள். இவர்கள்தான் பிசாசு, பேய், ஆவி முதலியவைகளின் படங்களின் மீதும், அவைகளின் அசைவுகள், முதலியவைகளிலும் அல்லது மற்ற எந்தவிதமான அயோக்கிய தனங்களிலும் ஹம்பக்களிலும் நம்பிவருகிறார்கள். சர். ஆர்தர் கானன் டாயில் என்பவர்கூட பேய்களின் மனித சொரூபத்தோடு கூடியதும் இரகுகளைக் கொண்டதுமான பல படங்கள் தம் வசமிருப்பதாக பிரசுரித்திருக்கிறார். ஹௌதினி போன்ற விஞ்ஞானிகள் இவைகளைக் குறித்து எவ்வளவோ விளக்கவுரைகள் விளக்கப்பட்டும் சர். ஆர்தர் போன்றவர்கள் இத்தகைய விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருவதைக்கண்டு மூடநம்பிக்கையின் உரம் எவ்வளவு தூரம் மக்கிப்போய் மண்ணோடு மண்ணாய் கலந்துகொண்டதோ அதேபோல் வேரூன்றிருப்பதை எடுத்துக்காட்டவும் வேண்டுமா?

ஆத்மாவைக் குறித்து சிறிதுகூட நம்பிக்கையே யில்லாத சிலர்கூட இத்தகையஜாலவித்தைகள்-மர்மமான காரியங்கள் செய்வதைக் கண்டு சந்தேக வாதிகளாக மாறிவிடுகிறார்கள்.

"போரம்" என்ற புத்தகத்திலே தோழர் ஆல்டஸ்ஹக்ஸிலி இம்மாதிரி விஷயங்களை ½மணி நேரம் தாம் பார்த்துக் கொண்டேயிருந்து விட்டால் தம்முடைய சொந்த அபிப்பிராயம் மாற்றமடைந்து விடுகிறது எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

இதனால் மனிதனது மூளை ஸ்திரமானதாயில்லை யென்றும் யோக்கியமானவர்களைக் கூட ஏமாற்றி விடுகிறது என்றும் தெரிகிறதல்லவா?

எவர் எவ்வளவுதான் கற்றவராயிருந்தாலும் இயற்கை தோற்றத்திலே அவனுக்கு நம்பிக்கையில்லையானால் ஒரு காளும் ஒரு சிறந்த ஆராய்ச்சியாளனாக விளங்க முடியாது என புரபசர் போரிங்கே கூறியிருக்கிறார். ஒரு சமயம் மின்சார நிபுணர் ஒருவர் விஞ்ஞானிகள் கூட்டத்திலே ஒரு விஷயத்தைக் குறித்து ருஸ்ூப்பித்துக் காட்டுகையில் கால்வானோமிட்டரின் ஊசி நகரவேண்டிய சமயத்தில் நகரவில்லை, உடனே அந்த நிபுணர் அதை தாமே இலேசாக நகர்த்தினார். மறு தடவை அதேமாதிரி ருசுப்பிக்கையில் தானாகவே ஊசி நகர்ந்துவிட்டது. இதைக்கண்டு "இத் தடவை அது தானாகவே போகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஆகவே விஞ்ஞானத்திலேனத்தகைய பூதத்திற்கோ பிசாசுவுக்கோ சிறிதாவது இடமிருக்கிறதாக எண்ண இடமுமில்லை. சாற்ற சான்றுகளுமில்லை. மனிதனுக்கும் அவைகளுக்கும் சம்பந்தம் உண்டு என்பது பொருத்தமற்ற கூடற்றேயாகும்.

விஞ்ஞானம் எல்லாவற்றையும் விளக்கிவிட முடியாது. ஆனாலும் தனது அறிவுக்குப் பொருந்தாத எந்தக்கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளாது. அப்படி ஒப்புக்கொண்டு விட்டதாகச் சொன்னாலும் தங்களுடைய ஒரு குறிப்பிட்ட எண்ணத்திற்காகவே என்றுதான் சொல்லவேண்டும்.

(ரீசன்)

# பகுத்தறிவு வெளியீடுகள்.

—)⊜(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ... ... ரூ. 0 5 0

பிரகிருதிவாதம் ... ... ,, 0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ... ,, 0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல? ... ... ,, 0 3 0

மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ... ,, 0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன? ... ... ,, 0 3 0

கடவுள் ... ... ... ,, 0 5 0

நான் சமுசயவாதியானதேன்? ... ... ,, 0 3 0

வால்டேர் ... ... ... ,, 0 4 0

பேய்-பூதம்-பிசாசு .. ... ,, 0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும் ... ... ,, 0 3 0

பிரபஞ்ச உற்பத்தி ... ... ... ,, 0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி ... ... ... ,, 0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம் 0 6 0

ஷை 2-ம் பாகம் 0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம் 0 4 0

ஷை 2-ம் பாகம் 0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும் ... ... ,, 0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ... ,, 0 5 0

மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.) 0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர், குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | இந்தியாவின் குறைபாடுகள் (160பக்கம்) | 0 | 8 | 0 |
| 2. | லெனினும், மதமும் | 0 | 4 | 0 |
| 3. | பொதுவுடமைத் தத்துவங்கள் | 0 | 3 | 0 |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | உழைப்பாளிக்குதக்குவன் இவ்வுலகமில்லை | 0 | 1 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 8. | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9 | ,, கிட்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (ரான்காம்பதிப்பு) 200பக்கம் | 0 | 5 | 0 |
| 11 | தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12 | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 13. | பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | சீர்திருத்தம் (ஈ. வெ. ரா.) | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | சுயமரியாதைப் பாடல் | 0 | 2 | 0 |
| 18. | கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 19. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 20 | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 21. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 22. | ஈ. வெ.ரா இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 9 |
| 23. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 24. | சோதிடஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| 25. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| 26. | மறுபடியும் மறுப்பு | 0 | 3 | 0 |
| 27. | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| 28. | புது ரஷ்யா (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 29. | புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் | 0 | 8 | 0 |
| 30. | கர்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| 1 | ராவணப் பெரியார் | 0 | 5 | 0 |
| 32 | நங்கர்சால் பொன்மொழிகள் | 0 | 4 | 0 |
| 33 | தாகம் எங்கே? | 0 | 2 | 0 |
| 34 | ஜாதியை ஒழிக்க வழி | 0 | 4 | 0 |
| 35. | கலைக்கியானம் அல்லது கைவல்யம்கட்டுரை | 0 | 5 | 0 |
| 36. | பரிணாமவாதம் உண்மையா? | 0 | 4 | 0 |

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnaswamy at the
Unmaivilakam Press, Erode.